14ஆவது வருடத்தில்....

விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 14 MAY 01, 2004 பாலம் 09

வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

7வது இதழ்


சிறப்பு விலை

$1.50 மட்டுமே

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

Direct: 416.315.9397

OFFICE: 416.321.6969

Sales Agents Welcome

அன்னையர் தினம்
மே 09, 2004



மே தினம்
மே 01, 2004



அன்னையர் தினம்
(MOTHERS DAY)

சிந்துவெளித் தெய்வம் எங்கள் அம்மா
உழுத வயலில் பொலி வேண்டி
முதலில் விதை எறிபவளும்
எங்கள் அம்மா

மீன்பிடிக்கும் மக்களைப்
பாதுகாத்து வளங்கொடுத்து
ஆட்சி செய்பவள் - மீனாட்சி
எங்கள் அம்மா
பாட்டாளிகளின் மூச்சில் கலந்திருப்பவளும்
எங்கள் அம்மா

கடல் எங்கள் அம்மா
கப்பல் எங்கள் அம்மா
கல்வி எங்கள் அம்மா
எது எது வளத்தைத் தருகுதோ
அவை எல்லாம் எங்கள் அம்மா

பட்டம் தார் இ: பட்டதாரி,
"இ"கரப் பெண்பால் ஈற்றுப் பெற்றுவரும்
"பட்டதாரி" என்பதுவும் ஓர்
பெண்பாற் சொல்லாகும்
எனவே அறிவுலகுக்கு வளம் தரும்
பட்டதாரிகூட எங்கள் அம்மா


நாடு அம்மா வீடு அம்மா
நம் உடலுக்கு நோயெதிர்ப்புச் சக்தியை
தமது இரத்தத்தில் இருந்து பிரித்தெடுத்து
பச்சையாக எமக்கு ஊட்டுபவள்
எங்கள் அம்மா

ஆகவே - நம் - அம்மாவை
வணங்குவோம்...


K. Muthurajah, B.A.



துரித பணமாற்றுச் சேவை



வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு



மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

Singapore Communication

Since 1991

FAMILY PLAN $40.00/M/2 PHONES

- 100 min Daytime to share/ Weekend Free
- upgraded for Free Evening with more Min more min.
- 2500 Min Free between 2 phones
- V/M, C/C & C/C Free
- Buy one phone as low as 49.99 and 2nd Free***
- 2 Year Contract
- 40.00/M
- 350 Min Daytime Free
- Evenings & Weekends Free
- V/M, C/C & C/W Free

*** Offer Ends Without Notice***

For more Info Please visit to the Store

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு



WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

அருள் விருந்து

- சேவை செய்யாதவர்களுக்கு வாழ்க்கை வெற்றி ஆகாது. சேவை செய்கின்றவர்களுக்கு வெற்றியும் மனத் தூய்மையும் உண்டாகின்றன.
- தேட்டையுள் பெரியது அமைதி. அமைதியுற்றிருப்பவன் உலகு அனைத்தையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான்.
- கட்டிடம் ஒன்றின் அஸ்திவாரம் பூமியுள் ஆழ்ந்து புதையுமளவு அதுமேலே எழ வல்லதாகிறது. பணியுமளவு ஒருவன் மேலோன் ஆகிறான்.
- தங்களையறியாமலும், விளம்பரம் செய்யாமலும் பக்தர்கள் உலகுக்கு உதவிபுரிகின்றனர். அவர்கள் புரிகின்ற உதவிக்கு நிகரானது வேறு எதுவும் எவ்வுலகிலும் இல்லை.
- யாசகன் ஒருவன் அருவருப்பை உண்டுபண்ணுகிறான். தாராளமான மனப்பான்மை படையாத பணக்காரனோடு அதைவிடப் பெரிய அருவருப்பை உண்டு பண்ணுகிறான்.

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176

OFFICE: 416.321.6969



HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto



செய்யும் தொழிலில், வெற்றி பெற

உங்கள் வெற்றிக்கு யார் காரணம்?

"சனி திசை நடக்குது", "ஆண்டவன் கருணை காட்ட மாட்டேன்கிறார்"' "வியாபாரம் அவ்வளவு நல்லா நடக்கல" இத்தகைய வாக்கியங்களை தொழில் செய்வோர் சொல்ல பல சமயங்களில் கேட்கிறேன். அப்போதெல்லாம் எனக்கு ஒரு கதை தான் நினைவுக்கு வருகின்றது. ஒரு நகரத்தை வெள்ளம் தாக்க ஆரம்பித்தது. ஊரை விட்டு எல்லோரும் வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தனர். ஆனால் பீட்டர் மட்டும் வெளியேற முயற்சிக்கவில்லை. அவன் நினைக் கிறான், "நான் உண்மையான கடவுள் பக்தன், அவர் என்னைக் காப்பாற்றுவார்" தண்ணீர் உயர ஆரம்பிக்கின்றது. பீட்டரின் பக்கத்து வீட்டுக்காரர், பீட்டனைப் பார்த்துச் சொல்கிறார், "பீட்டர் சீக்கிரம் என்னுடன் வா; இந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும்."

பெரி. முத்துராமன்

பீட்டர் மறுக்கிறான், "நான் உண்மையான கடவுள் பக்தன், அவர் என்னைக் காப்பாற்றுவார்." தண்ணீர் மேலும் உயர ஆரம்பிக்கின்றது. பீட்டர் மேல்மாடிக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் நேரு கின்றது. அப்போது தீயணைப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் படகில் பீட்டர் இருக்கும் இடத்திற்கு வருகிறார். "பீட்டர் படகில் ஏறு, இல்லையேல் உன்னைக் காப்பாற்ற முடியாது."


பீட்டர் மறுக்கிறான். "நான் உண்மையான கடவுள் பக்தன், அவர் என்னைக் காப்பாற்றுவார். "வெள்ளம் மேலும் உயருகின்றது. பீட்டர் நீரில் மூழ்காமல் இருக்கக் கூரைக்கு ஏறுகின்றான். அப்போது விட்டுப் போனவர்களைக் காப்பாற்றுவதற்காக வந்த ஹெலிகாப்டர் ஒன்று பீட்டர் கூரையின் மேலிருப்பதைக் பார்த்துவிட்டு, அவன் ஏறி வர கயிறு ஒன்றை வீசுகின்றது. பீட்டரோ கயிரைத் தீண்டவே இல்லை. அப்போதும் அவன் நினைக்கிறான். "நான் உண்மையான கடவுள் பக்தன்; அவர் என்னைக் காப்பாற்றுவார்."

பிறகு வெள்ளத்தில் மூழ்கி பீட்டர் இறந்து விடுகின்றான். அவன் சொர்க்கத்துக்கு வந்தவுடன் கடவுளைப் பார்த்துக் கேட் கிறான். "நான் உன்னுடைய உண்மை யான பக்தன் அல்லவா? நீ ஏன் என்னைக் காப்பாற்றவில்லை."

கடவுள் சொல்கிறார், "என்ன சொல்கிறாய்? நான் உன்னைக் காக்க மூன்று உதவியாளர்களை பக்கத்து வீட்டுக்காரர், தீயணைப்புப் படையாளர், ஹெலிகாப்டர் அனுப்பினேன். நீ அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டாய்." பல சந்தர்பங்களில் நாம் பீட்டரைப் போலத் தான் நடந்து கொள்கின்றோம். நமக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களை, நாம் உணரத் தவறி விடுகின்றோம்.

"வியாபாரத்தில் வெற்றி" என்பது பல சந்தர்ப்பங்களில் "விற்பனையில் வரும் வெற்றியாகவே உள்ளது. ஒரு பொருள் அல்லது சேவையை எவ்வாறு வெற்றிகரமாக விற்பது? இப்போது முடிவு செய்துவிடுவோம். வெற்றிக்கென தனி ஃபார்முலா அல்லது மந்திரசக்தி ஒன்றும் கிடையாது. உங்கள் முயற்ச்சி பூஜ்யம் என்றால் விளைவும் பூஜ்யமாகத்தான் இருக்கும். எதை விதைக்கின்றோமோ, அதைத்தானே அறுவடை செய்ய முடியும்?

விற்பனைத்துறையில் வெற்றிபெற வேண் டுமானால் வெளியில் செல்லுங்கள். நாலுபேரைப் பாருங்கள், விற்பனை



செய்யுங்கள்.

* நீங்கள் செய்யும் தொழில் என்ன என்று TV விளம்பரத்தைப் போன்று 30 விநாடிகளுக்குள் சொல்ல முடியுமா? (இல்லையேல் அதைப் பயிற்சி செய்து பழகிக் கொள்ளுங்கள்)
* அவ்வாறு உங்களை தொழிலை போட்டியாளரை விட வாடிக்கையாளர் உங்களிடம் ஏன் வாங்க வேண்டும் என்பதற்கான விடையும் இருக்க வேண்டும்.
* உதாரணத்துக்கு வாடிக்கையாளருக்கு கிடைக்கும் பயன் கீழ்க்கண்ட எல்லாமாகவோ அல்லது ஏதேனும் ஒன்றாகவோ இருக்கக் கூடும்.
* தரமான பொருள் / சேவை
* குறைந்த விலை



* விரைவான சேவை
* உங்கள் பொருள் அல்லது சேவையைப் பற்றி படம் உள்ளதா? படத்துடன் விளம்பரம் செய்கின்றீர்களா? ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.
* பலசமயங்களில் பொருள் அல்லது சேவையை எங்கு, எப்படிப் பெற வேண்டும்? என்பதை விளம்பரத்தார் குறிப்பிட மறப்பதையும் பார்க்கிறோம். நீங்கள் அப்படி இல்லையே!

இப்போதெல்லாம் வாடிக்கையாளர் கிடைப்பது என்பது அரிதினும் அரிதாக உள்ளது. அத்தகைய அரிதான வாடிக்கையாளரை எப்படி நடத்துவது? விற்பனையின் வெற்றிக்கு இந்த அணுகு முறை மிக முக்கியமானதாகின்றது.
* வாடிக்கையாளரை எப்போதும் புன்னகையுடன் வரவேற்க வேண்டும்.
* குறைந்தது ஒருமுறையாவது பெயரைச் சொல்லிக் கூப்பிடுங்கள்.
* ஒன்றை விவரிக்குமுன், அவர்கள் சம்மதத்தைக் கோருங்கள்.
* விவரித்து முடித்தபின், அவர்களுக்குச் சொன்னது, புரிந்ததா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
* கேள்விகள் கேட்க ஊக்குவியுங்கள்.
* ஆட்சேபனைகளை, தகுந்த வாய்ப்புக் களாகக் கருதி, உங்கள் பொருள் அல்லது சேவையைப் பற்றிய விபரத்தை இன்னும் தெளிவாகக் கூறுங்கள்.
* கடைசியாக, இந்தப் பொருள் அல்லது சேவை வேறு யாருக்குத் தேவைப்படும். அதற்கான நபர்கள் பற்றிய விபரங்களைக் கூற முடியுமா என்று கேளுங்கள்.
*இறுதியில் நன்றிகூறி மகிழ்ச்சியாக உரையாடலை முடியுங்கள்.


உங்கள் வாடிக்கையாளர் "முடியாது" அல்லது" இல்லை" என்று கூறினாலும், அதுவும் ஒரு நல்ல பதிலே. அவருக்கு இப்போது தேவை இல்லை அல்லது நீங்கள் சொல்வதில் அவருக்கு நம்பிக்கை வரவில்லை என்றே அர்த்தம். அப்படியானால் எப்போது, எப்படி மீண்டும் அணுகலாம் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.

மோசமான பொருளை நல்ல விற்ப உத்திகளின் மூலம் விற்று விட முடி அப்படியே விற்றாலும் வாடிக்கையா நிரந்தரமாக இழந்து விடுவீ மனந்தளராதீர்கள். முயலுங்கள், நிச்சயம்.

நாளையை இன்றே தொடுவோ





* உங்கள் ஓய்வூதியத்தைப் பாதுகாக்க விரும்புகிறீர்களா?
* உங்களுக்கு பெரிய வருத்தங்கள் வருமானால் RRSP யிலிருந்து தான் வருமானத்தைப் பெற வேண்டுமா?
* பெரிய வருத்தங்கள் வருவதனாலேயே 48 சதவீட்டுக் கடன்கள் கட்ட முடியாம போயிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? (மரணத்தினால் 2 சத வீ கடன்களே கட்ட முடியாமல் போயிருப்பதாக புள்ளி விபரம் கூறுகின்றது)



உங்கள் கவலை எதுவானாலும் இலவச ஆலோசனை பெற அழையுங்
பெரி. முத்துராமன், MBA, M.COM., PFPC
Financial Planner & Consultant
416-430-0623 / Cell: 416-278-2026

HOME INSPECTION





> வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
> வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

நம்பிக்கையான, நவீன, நிபுணத்துவ சேவைக்கு
ந. தயாபரன்
Certified Inspection Specialist

> NEW & RE-SALE HOME INSPECTIONS
> PROBLEM ANALYSIS & SOLUTIONS

Expert Building Inspections LTD.

- Exceed the Standards
- Professionals Serving the GTA
- Industry Canada Registered
- On site Report

24 /7 - Toll Free - **1 866 373 3315**
416.727.8336

திருமண சேவை



உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள் எமது சேவையின் பலனைப் பெற்ற தம்பதிகள் பலர்/ எம்மவர்களின் தேவையே எமது சேவை.

அழையுங்கள்: 416-261-6219
Weekly After 6:00PM / Weekends Anytime



SMILE

- BUSINESS PLANS
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

RK CONSULTANTS

PL. CALL: 905-887-7457 / 905-751-7537
24 hrs, 365 days

APPLEMORE AUTOMOTIVE

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

வாகனங்களின் Lease



முதலில் நீங்கள் புரிந்து கொள்வது நன்று. அதன் பின்னர் Lease ஐ பற்றியும் அதன் நன்னை தீமைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதை விடுத்து மாதாந்த கட்டுப்பணத்தில் மட்டும் நீங்கள் கவனம் செலுத்துபவராக இருப்பின் Lease முடியும் தருவாயில் பெரிய ஒரு தொகையையும் கையால் கொடுத்துவிட்டு வாகனத்தையும் விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நீங்கள் உள்ளாக வேண்டிய நிலையில் இருப்பீர்கள் என்பதை மனதில் கொள்வது நன்மை பயற்கும். விபரம் தெரிந்த நம்பிக்கையான ஒருவர் மூலம் வாகனத்தை பெறுவதன் மூலம் நன்மையடையலாம்.

தற்போது வாகனங்களை Lease இல் எடுப்பவர்களின் தொகை 100 க்கு 90 % எனலாம். இந்த Lease இல் எடுக்கும் போது பலர் முக்கியமான விடயங்கள் பலவற்றை கவனிப்பதில்லை. எல்லோரும் மாதாந்த கட்டுப்பணத்தை மட்டுமே மனதில் கொள்வதுண்டு. அதுமட்டும் அல்லாமல் அவர் $300 மாதம் கட்டுகிறார். நான் ஏன் $350 கட்ட வேண்டும் என்பது போன்ற வாதங்கள் தான் முன்நிற்கின்றன. Lease இலும் பல விதமான Lease உள்ளன என்பதை

மேலதிக விபரங்களுக்கு: சோதீஸ்
Action Honda - 416-704-1179

Special

Rogers Cable
Installation Offer

எப்பவும் இல்லாத விஷேட சலுகை இந்த மாதம் மட்டுமே முந்திடுவீர்!!

No Connection Fee. No Contract

Rogers
Hi Speed Internet
2 Months Free
Save upto $110

TV - Cable Service
1 st month free
3rd Month $15 Rebate
Save up to $120

கனடாவின் முன்னணி நிகழ்ச்சிகளை வழங்கும் **Tamil Vision (TVI)** **பார்க்க ஆர்வமா?** அழைத்த அதே நாளில் உங்கள் இல்லம் வந்து இலவச இணைப்பை ஏற்படுத்தி தருகிறோம்.
Computer Truble Shoot Specialist தமிழில் தொடர்புகளுக்கு எந்நேரமும்
அழையுங்கள் **Sanjay - 416-315-2917**

"ஆழியவளை" நூல் வெளியீட்டு விழா



ஆழியவளை யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும் எனும் ஆய்வுநூலின் வெளியீட்டு விழா இந்த மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு ஸ்காபுறோ சிவிக்சென்ரரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ரொறன்ரோவில் எம்மவர்களால் கல்விசார் ஆய்வுக்கட்டுரை நூல் வடிவம் பெற்றது இதுவே முதல் தடவையாகும். தாயகத்தின் ஓர் கடலோரக் கிராமத்தின் வரலாறு, வாழ்வியல், இலக்கியம் பற்றிச் சொல்லப்பட்டு இருக்கும் முறைமை மிகச் சிறப்புடையது. இங்கு வாழும் எமது அடுத்த தலைமுறை எமது வேரைத் தேடும்போது இதுபோன்ற நூல்கள்தான் அவர்களுக்கு வழிகாட்டும் என்பது உண்மை.

இந்நிகழ்வுக்குத் தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தினார். நூல் அறிமுகத்தைப் பேராசிரியர் இ. பாலசுந்தரம் வழங்கினார். பெரியவர் நக்கீரன் வெளியீட்டுரையை நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார். ஆய்வுரை சிறப்புரைகளை, கலாநிதி குலமோகன், வித்துவான் ஞானறட்ணம், மீரா, தேன்மொழி என்போர் நிகழ்த்தினர். மாலா நன்றி உரையை வழங்கினார்.

நூலாசிரியர் தனதுரையில் இந்நூலை எழுதத் தூண்டிய பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலியோருக்கு நன்றி தெரிவித்ததோடு இந்நூல் வெளிவந்ததில் தான் முழு மனநிறைவு அடைந்துள்ளதையும் குறிப்பிட்டார். இதுபோன்ற நூல்கள் ஒவ்வொரு ஊருக்கும் வெளிவந்து தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் உலக சமூகத்துக்கும் பயன் கொடுக்கவேண்டும் என்று விளம்பரம், உலகத்தமிழோசை வாழ்த்துகின்றது.

- பார்வை: சத்தியன்

16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

யோகாஸ்

குறுக்கு எழுத்துப் போட்டி இல. 151

1			■	2			
	■	■	3	■	4	■	
5		6			■		7
	■		8	■	9	■	■
	10	■					11
■		12	■	■	■	■	
	■	■		■	13	14	
15			16		■		17

இட - வல

1. தற்போது பிறந்துள்ள தமிழ் புதுவருடம்
2. பூரணை
5. மிகப் பெரியது
7. சிங்கம் (வல-இட)
8. மடியச் செய் (வல-இட)
10. சம்மதி (வல-இட)
11. இந்தியாவில் உள்ள நீர்வீழ்ச்சி(வல-இட)
12. செல்வம் (வல-இட)
13. துணை செய்
15. நடத்தை
17. ஆராதனை (வல-இட)

மேல் - கீழ்

1. வெற்றிலை பாக்கு
3. ஓசை
4. கலப்பை(கீழ்-மேல்)
6. எருது
7. சம்பல் அரைக்க உதவுவது(கீழ்-மேல்)
9. பறவை ஒன்று
10. பழங்களின் உறுதியான மேலுறை
14. மாமிசம்
15. வெளிச்சம் (கீழ் - மேல்)
16. மூங்கில்(கீழ்-மேல்)
17. பூமி (கீழ்-மேல்)

உ	த்	த	ர	ம்	■	டை	ஒ
டு	■	ரை	■	ர	■	■	ர
க்	■	■	அ	பூ	ர்	வ	ம்
கை	து	பா	■	■	■	■	■
■	த்	■	கு	ண்	ட	ல	ம்
று	ம	■	த்	■	■	க	ட
ன்	■	ஆ	த	ன	ம்	■	ண்
ஒ	த்	தி	கை	■	■	பா	கு

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் May 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

150இல் வெற்றி பெற்றோர்
1) R. Lavanya, Mississauga
2) C. Kathirgamanathan , Donmills

* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.



Niru BRAND®

'நிரு' தயாரிப்புக்கள்'

கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன

No.1

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

தரம்

No. 1

Manufacturers & Distributors of

Niru Brand® Products

NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe

UK. Marketing Office: NIRU (Europe) LTD.

Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

பகுத்தறிவு மனிதனின் சிந்தனைக்கு...



நன்றி கொன்றவர்க்கு உய்வு உண்டா?



நன்றி என்ற அழகிய, அர்த்தமுள்ள தமிழ்ச்சொல்லை அவ்வளவாக தமிழர்கள் உபயோகிப்பதில்லை. ஏன்? ஒருவேளை தாம் நன்றியாக நடந்து கொள்வதில்லை என்ற உண்மை அவர்களின் மனதினை உறுத்துவதனாலும் இருக்கலாம். நன்றி யாக இருக்கின்றோமோ நடக்கின்றோமோ என்ற உண்மை தெரிந்தவர்கள் அவர்களே தான் என்பதனாலே தான் அப்படி எண்ணத்தோன்றுகின்றது. தாய்மொழி யல்லாத மொழியில், Taa, Thanks, Thank You அல்லது Thank You Very Much என்று வாய்நோகாமல் இலகுவில் சொல்லி விட்டால் இரண்டு வகைகளில் பிரயோசனம். ஒன்று, ஏதோ ஒன்று இரண்டு ஆங்கில சொற்கள் தெரியும் என்று மற்றவர்களுக்கு காட்டிக்கொண்டு தமக்குள் பெருமைப்பட்டு சந்தோசப் படலாம். மற்றையது புரியாத பாசையில் அல்லது அன்னிய பாசையில் சொல்லிவிட்டால் சொல்லிய நன்றியில் இருந்து தம்மை அன்னியப்படுத்திக் கொண்டு, நன்றியாக நடக்க வேண்டியதில்லை தானே என்ற நல்ல காரணங்களுக்காகவும் இருக்கலாம்.

திருக்குறளில் திருவள்ளுவர் சொன்ன அத்தனை குறள்களிலும் எல்லோருக்கும் தெரிந்த குறள்களில் ஒன்று நன்றியை பற்றியது. அதில் என்ன சொன்னார்?

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

சாதாரண மனிதன் விளங்கிக கொண்டதன்படி எந்த நன்றியை மறந்தவர்களுக்கும் உய்வுண்டு. ஆனால் செய்நன்றி மறந்தவர்களுக்கு உய்வில்லை. அப்படியானால் உய்வுடைய மறக்கக்கூடிய நன்றிகள் என்ன என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில் மனித இனம் நன்றியை மறந்து நடப்பதற்குக் காரணமே திருவள்ளுவர் கூற்றின்படி தானோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. குறளை முற்றாக அறியாமல் என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். அதாவது எந்த நன்றியையும் கொன்றவர்க்கு உய்வுண்டு என்பதன்படியே தமிழர்கள் நடந்துகொள்வதாகத் தோன்று கின்றது. நன்றி மறந்து ஏன் நடக்கிறீர்கள் என்று கேட்டால் பழியை திருவள்ளுவர் மேல் போட்டுவிட்டாலும் ஆச்சரியப்பட முடியாது. ஏன் எனில் தமிழர்களின் வீழ்ச்சிக்கும், பிரச்சினைக்களுக்கும், ஒழுக்கமற்ற பழக்க வழக்கங்களுக்கும் காரணமே மற்றவர்கள் தானே.

அது சரி, என் நன்றி என்றால் என்ன என்று ஒரு சந்தேகம் மனதில் எழுகின்றது. எந்தவகையான நன்றிகளையும் என்பதாக எத்தனையோ வருடங்களுக்கு முன் தமிழ் ஆசிரியர் விளக்கம் சொன்னதாக ஞாபகம். நன்றிகளில் பலவகை நன்றிகள் உண்டா அல்லது பலவகை உதவிகளை வள்ளுவர் கூறுகின்றாரா? என்று எண்ணுவதுடன் நின்றுவிடாமல், பழியை திருவள்ளுவர் மீதும், கற்பித்த ஆசிரியர் மீதும் போடாமல் முதிர்ச்சி அடைந்த மூளையின் மறதி என்ற குணத்தின் மகிமையை எண்ணிக்கொண்டு கேள்விக்கு விடைகாண வழமைபோல தமிழில் மட்டுமல்லாமல் பலவித சந்தேகங்களுக்கும் தீர்வு தரும் எனது தமிழ் குருவிடமே கேட்டு விட்டால் என்ன? யார் அவர்?



இன்றைய காலகட்டத்தில் நன்றியாய் இருப்பது பற்றிய உண்மையை மிக அழகாக தெளிவாக என் போன்ற சாதாரண மனிதர்களுமே விளங்கிக் கொள்ளக் கூடிய வகைகளில் இருவரிகளில் "அலுவல்கள் முடிக்க அடிக்கடி வருவர் அலுவல்கள் முடிந்த பின் அடிக்கவும் வருவர்" என்று கூறிய கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களிடமே கேட்டால் என்ன? தாய் தந்த பிறப்பையும் தந்தையின் பங்கையும் பாடம் கற்பித்த குரு போன்றவர்களின் உதவிகளானது அவர்களது கடமையாகும். ஆனால் எவனொருவன் குறிப்பறிந்து, தேவையறிந்து பிரதிபலனை எதிர்பாராமல் செய்யும் உதவியினை மறக்கின்றானோ அவர்களுக்குத்தான் உய்வில்லை என்று விளக்கம் கூறினார்.

அத்துடன் நன்றிகள் பற்றிய பல விளக்கங்களையும் தந்தார். என்னை ஏன் பெற்றாய்? பெற்ற நீ செய்ய வேண்டியது உங்கள் கடமை என்று கூறும் பிள்ளைகள் முதல் கற்பித்த வாத்தியாருக்கு என்ன தெரியும் எனக்கூறும் மாணவர்களைக் கொண்ட இன்றைய காலகட்டத்தில் நன்றியை எதிர்பார்ப்பதா? செய்த உதவியை மறந்து விட்டாயா? என்று கேட்டாலே உதை விழும் காலமிது.

அன்று ஞாயிறு காலை 8.30 மணி Omni 2 தொலைக்காட்சியில் வரும் "ஆரம்" நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டு இருந்தவேளையில் மனதிற்கு மகிழ்வைக் கொடுக்கக் கூடிய ஆச்சரியமான அதிர்ச்சி காத்திருந்தது. கலைத்துறையில் சிறிய வயதில் இருந்தே தனக்கு இருந்த ஆர்வத்தையும், ஈழமண்ணில் தனது பங்களிப்புகளையும், தனது கலைத் தாகத்தையும் வளர்த்துவிட்டதில் பெற்றோர் களின் பங்கையும் நன்றியுடன் கூறிக்கொண்டிருந்த அந்த இளம் பெண் கலைஞர், தான் கனடாவிற்கு வந்தபின்பு இங்கிருந்த பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளில் தனக்கும் சந்தர்ப்பம் கொடுத்தவர்களையும் நன்றியுடன் கூறிக் கொண்டார். அந்த கலைஞரின் ஆற்றலை பற்றி முன்பே தெரிந்திருந்ததனால் அவரின் பங்களிப்பால் அந்த ஊடகங்கள் பெருமை பெற்றனவா? அல்லது அந்த கலைஞர் ஊடகங்களால் பெருமை பெற்றாரா? என்ற கேள்வி மனதில் எழுந்தது. குன்றின் மேல் ஏற உதவிய ஏணியையே எட்டி உதைத்துவிட்டது சுயநலம் காரணமாக குன்றிற்கு மட்டும் நன்றி சொல்லிக் கொண்டு நன்றி கெட்டதனமாகவும் ஒருவர் முதுகை ஒருவர் சொறிந்து கொண்டு தமது வயிற்றுப்பிழைப்புக்கு பிரியோசனப் படுபவர்களை மட்டுமே பிரபலப்படுத்தும் தமிழர்கள் மத்தியில் நல்ல பண்புடன் உதாரணமாக மற்றவர்கள் பின்பற்ற கூடிய ஓர் ஆற்றல் மிக்க இளம் பெண் கலைஞர் அருட்செல்வி அமிர்தானந்தர் தமிழர் களிடையே வாழ்கின்றார் என்று தெரியவந்த போது மனதிற்கு ஓர் ஆறுதலைக் கொடுத்தது.



நல்ல கலை ஆற்றல்களையும், நல்ல பண்புகளையும் அந்த இளம் கலைஞரிடம் வளர்த்து விட்ட அவரது பெற்றாரை மற்றைய பெற்றோர்களும் பின்பற்றுவார்கள், நல்ல பண்பான தமிழ் சமுதாயத்தை உருவாக்குவார்கள் என நம்புவோம்.

சிந்தனை தொடரும்

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்

LARGE INDOOR PUBLIC CAR AUCTION

EVERY WEDNESDAY EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL

> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM
FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com



வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!

பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி

பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில் முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

Param Gnana
Sales Representative
HomeLife GTA Realty Inc.

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)

HOMELIFE HIGHER STANDARDS






தமிழர்களுக்குச் செல்லும் இடம் எல்லாம் பிரச்சினைகள்.....!!!

விளையாட்டுத் தகவல்கள் - 144

நாம் தமிழர்கள் என்று நினைந்து விதியை நோவதா? அல்லது நாம் சிறீலங்காவில் பிறந்து விட்டோமே என்று கடவுளை நோவதா? என்று தான் தெரியவில்லை!!! ஒரு தமிழன் முன்னேறுகிறான் என்றால், ஒன்று வேறு இனத்தவன் பிடித்து இழுத்து வீழ்த்துகின்றான்! அல்லது எமது இனத்தவனே பிடித்து இழுத்து விடுகின்றான். இது எமது தலைவிதி!!

இன்று ஒரு தமிழன் குறைந்த வயதில்,



அதி குறைந்த ரெஸ்ட் போட்டி களில் கலந்து கொண்டு முதலாவது வீரர் என்று உலகமே பெருமைப் படும் கிரிக்கெட் பந்து வீச்சாளர் முத்தையா முதளிதரன் 500 விக்கெட்களை கடந்து உலக சாதனையை வரும் கிழமைகளில் முறியடிக்க போகின்றார் என்ற விடயம் தெரிந்தவுடன் வெள்ளை இனத்தவர்கள் தொடங்கி எல்லாருமே பெருமைப்படத் தொடங்கி விட்டார்கள். அவுஸ்திரேலியா நாட்டு வீரர்களுக்கோ, நடுவர்களுக்கோ இது இருப்புக்கொள்ளவில்லை. எப்படியாவது சாக்கு போக்குச் சொல்லி முரளிதரனை தடை செய்து விட வேண்டும் என்று துடியாகத் துடிக்கின்றார்கள். "மம்மி"யிடம் மாத்திரை வாங்கி சாப்பிட்டதால் ஒருவருடம் தடை-பெற்ற "சேன்வார்ன்" தான் முதலில் உலக சாதனையை முறியடிக்க வேண்டும் என்ற உள்நோக்கில் இவர்கள் துடியாக துடிக்கின்றார்கள்.

எமது தமிழ் வீரனின் பந்து வீச்சு "சரி" என்பதை உலகிற்கு எடுத்து சொல்ல தயவு செய்து இந்த இணையத் தளத்திற்குச் சென்று வாக்களியுங்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

SAY - "YES"
To: Murali -
http://smh.com.au/polls/sport/results.html

'ஓராண்டுகால தடை விதிக்கப்படும்' முரளிதரனுக்கு ஐ.சி.ஸி எச்சரிக்கை

"DOOSRA" முறையிலான பந்துவீச்சை இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் இனிமேல் பிரயோகிக்கக்கூடாது எனவும், அவ்வாறு அவர் தொடர்ந்து பந்துவீசினால் அவருக்கு ஓராண்டுகால- தடை விதிக்கப்படும் எனவும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் எச்சரித்துள்ளது.

சென்றமாதம் இலங்கையில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ரெஸ்ட் தொடரின்போது, முரளிதரன் துஸ்ரா முறையில் பந்துவீசி அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டங்களை நெருக்கடிக்கு உள்ளாக்கினார். அந்தத் தொடரில் போட்டி நடுவராக பணியாற்றிய இங்கிலாந்தின் கிறிஸ் பிராட், முரளிதரனின் பந்துவீச்சை முறையற்றது என்றும், கிரிக்கெட் நெறிமுறைகளுக்கு முரணானது என்றும் அறிவித்து ஐ.சி.ஸி இல் புகார் செய்தார்.

அதையடுத்து, அவுஸ்திரேலியாவில் உள்ள மனித உடலமைப்புக்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்றிற்கு ஐ.சி.ஸி யால் அனுப்பப்பட்டார் முரளிதரன். அங்கு அவரை பரிசோதித்த வல்லுனர்கள், முரளிதரனின் பந்துவீச்சு முறையானது தான் என்று அறிவித்தார்கள். இருப்பினும் அவரது கை எலும்பு, பிறவியிலேயே சற்று வளைந்த தன்மையுள்ளதாகவும், அதனால் அவரது பந்து முறையற்றது போல தோற்றம் அளிப்பதாகவும் அவர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

சுழற்பந்துவீசும்போது 5 டிகிரி வரை கை சாய்ந்திருக்கலாம் என்று ஐ.சி.ஸி யின் விதி அனுமதித்திருக்கிறது. ஆனால், முரளிதரன் பந்துவீசும் அவரது கை 10 டிகிரிவரை சாய்கிறது என்பதால் தற்போது புதிதாக சர்ச்சை கிளம்பி யுள்ளது.

"முழங்கை அமைப்பே அப்படித்தான். எனவே, 5 டிகிரி என்பதை 10 டிகிரியாக மாற்றியமைக்கலாம்" என்று ஐ.சி.சிக்கு முரளிதரனை பரிசோதித்த வல்லுனர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தனர். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட ஐ.சி.சி யின் தலைமை நிர்வாகி மால்கம் ஸீபீட், "ஐ.ஸி.ஸி அந்த நெறிமுறை பல்வேறு வகையான நிபுணர்களின் ஆய்வுகளுக்கு பிறகே, நடைமுறைப் படுத்தப் பட்டிருக்கிறது. அதனால், அதை மாற்றும் பேச்சிற்கே இடமில்லை. அந்த விதிமுறையின்படி

எஸ். கணேஷ்

முரளிதரன் பந்துவீசாவிட்டால், அவருக்கு ஓராண்டு கால தடை விதிக்கப்படலாம். எனவே, அவர் Doosra வகையிலான பந்துவீச்சை மேலும் தொடர்ந்தால் ஓராண்டு காலம் கிரிக்கெட் ஆடுவதற்கு அவருக்கு தடைவிதிக்கலாம்" என்று ஸ்பீட் கூறினார்.

அந்த சர்ச்சையை பிரயோகிக்க வேண்டாம் என்று நினைத்த சிறீலங்கா கிரிக்கெட் வாரியம், முரளிதரனிடம் அந்தவகையான பந்துவீச்சை தொடர வேண்டாம் என்று சிம்பாப்வே தொடருக்கு முன்னதாக கேட்டுக்கொண்டது. ஆனால் சிறீலங்கா கிரிக்கெட் வாரியத்தின் அந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்ட முரளிதரன், சிம்பாப்வே அணிக்கு எதிராக நடைபெற்ற முதலாவது, இரண்டாவது இரு போட்டிகளிலும் தொடர்ந்து பலமுறை "DOOSRA" முறையில் பந்துவீசியுள்ளார்.

மேலே குறிப்பிட்ட இணையத்தளத்திற்கு சென்று தயவு செய்து எங்கள் தமிழர் ஒற்றுமையைக் காட்டுங்கள்.

சிறீலங்கா மீண்டும் தனது சாதனையை முறியடித்துள்ளது. தொடரை வென்றது இலங்கை.

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மிகக் குறைந்த ஸ்கோரில் எல்லா விக்கெற்றுக்களையும் இழந்த அணி என்ற பெயரைப் பெற்று, எதிரான 3 வது ஒருநாள் போட்டியில் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சிம்பாப்வே படுதோல்வி அடைந்தது.

சிம்பாப்வே, சிறீலங்கா அணிகளுக்கு இடையேயான 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் 3வது போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 18 ஓவர்களில் 35 ஓட்டங்களுக்கு எல்லா விக்கெற்றுக் களையும் இழந்தது.

அடுத்து களம் இறங்கிய சிறீலங்கா அணி 9.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்கள் எடுத்து வென்றது. இந்த வெற்றியின் மூலம் 3-0 என்ற நிலையில் தொடரை இலங்கை வென்றது. இந்த போட்டியில் சிம்பாப்வே 35 ஓட்டகளில் எல்லா விக்கெற்றுக்களையும் இழந்தது. இது ஒருநாள் போட்டிகளில் மிகக்குறைந்த ஸ்கோராகும். 2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை போட்டியில் கனடா அணி 36 ஓட்டங்களுக்கு இலங்கை அணியிடம் எல்லா விக்கெற்றுக்களையும் இழந்து இருந்ததே முந்தைய குறைந்த ஸ்கோராகும்.

இந்த போட்டியில் சிறிலங்கா அணியில் முரளிதரன் விளையாடவில்லை. இருப்பினும் துடுப்பாட்டத்தில் படு மோசமாக விளையாடி சிம்பாப்வே அணி தடுமாறியது.

இந்தப் போட்டியில் இலங்கை வீரர் சமிந்தா வாஸ் 11 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் ஒருநாள் போட்டிகளில் 301 விக்கெட்டுகளை வாஸ் வீழ்த்தினார். அறிமுக வீரரான பர்வீஸ் மெஹரூப் 3 ஓவர்களை வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சிம்பாப்வே அணியின் சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்தவர் டியான் இப்ராஹிம். இவர் எடுத்த ஓட்டங்கள் 7 ஆகும். சிம்பாப்வே அணியில் ஒரு வீரர் கூட இரட்டை இலக்கத்தை எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியிலும் முழுக்க முழுக்க அனுபவமற்ற அணியை சிம்பாப்வே களம் இறக்கியது.

டாசில் வென்ற சிறீலங்கா அணி சிம்பாப்வே அணியை முதலில் துடுப்பெடுத்தாடக் கேட்டுக் கொண்டது. துவக்கம் முதலே வரிசையாக விக்கெட்டுகளை இழக்கத் துவங்கியது சிம்பாப்வே அணி. முதல் விக்கெட்டை 5 ஓட்டங்களில் இழந்தது சிம்பாப்வே. ஓபனர் மாட்சிகென்யரி (4), முதல் விக்கெட்டாக வீழ்ந்தார். அடுத்து 2வது விக்கெட்டிற்கு ரெய்லர், இப்ராஹிம் இருவரும் 13 ஓட்டங்களை சேர்த்தனர். இதுவே சிம்பாப்வே அணியில் விக்கெட்டுகளுக்கு இடையே எடுக்கப்பட்ட அதிகபட்சமாகு

ஸ்கோர் 18 இருந்த போது இப்ராஹ (7). தெய்பு (0) ரெய்லர் (4) ஆக முவரின் விக்கெட்டை சிம்பாப்வே இழந்தது. புதிய அணியின் தலைவனா தெய்பு தான் சந்தித்த முதல் பந்திலே அவுட்டானார்.

அடுத்த ஸ்கோர் 19 ஓட்டங்களா இருந்த போது சிகும்புரா அவுட்டானார். இவருக்குப் பின்னர் வந் மரிக்வடே (2), சிபாண்டா (4), உட்செ (0), ஹோண்டோ (4), பான்யங்காரா ஆகியோர் அடுத்தடுத்து அவுட்டாக ஓவரில் 35 ஓட்டங்களுக்கு சிம்பாப்வே எல்லா விக்கெற்றுக்களையும் இழந்த சிம்பாப்வே அணியில் 4 வீரர்க ஆட்டமிழந்தனர்.

இந்த மிக எளிய இலக்கை நோக்க களம் இறங்கியது இலங்கை அணி. இந் இலக்கை தொடும் முன் ஒ விக்கெட்டை இழந்தது இலங்கை ஓபனர்களாக அர்னால்டு, ஜெயந்த இருவரும் களம் இறங்கினர். ஸ்கோர் 2 ஓட்டங்களாக இருந்த போது அர்னால் (6) முதல் விக்கெட்டாக ஹோண்டோவி பந்தில் வீழ்ந்தார்.

9.2 ஓவரில் ஜெயந்தா 2 ஓட்டங்களுடனும் ஜெயவர்த்தனே ஓட்டங்களுடனும் இருந்த போது 4 ஓட்டங்களை எடுத்த 9விக்கெ வித்தியாசத்தில் இலங்கை வென்றது இந்தப் போட்டியானது 2 மணி நேரம் 3 நிமிடங்களில் முடிந்தது. முதலி துடுப்பாடிய சிம்பாப்வே அணி 8 நிமிடங்களில் எல்லா விக்கெட்டு களையும் இழந்தது. இந்தப் போட்டியி ஒட்டுமொத்தமாக 27. 2 ஓவர்க மட்டுமே வீசப்பட்டன.

சுருக்கமானோர் ஸ்கோர்
சிம்பாப்வே அணி (18 ஓவர்கள்) 35.
இப்ராஹிம் 7, வாஸ் 4/12. மெஹரூப் 3/3
பெர்னாண்டோ 2/18.
இலங்கை (9.2 ஓவர்கள்) 40/1.
ஜெயந்தா 28 (ஆட்டம் இழக்கவில்லை)
ஹோண்டோ 1/11.

தொடர்ச்சி 7ஆம் பக்கம்

NTE AUTO

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573


என். ரி. இ. ஒட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

எங்கள் அதிபர் அமரர்

திரு. C.K. கந்தசாமி அவர்களுக்கோர் அஞ்சலி



மாடிக்கட்டிடத்தை இச்செய்தியில் ஆசிர்வதித்துள்ளார்.

எங்கள் மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமான அதிபர் அமரர் திரு. C.K. கந்தசாமியின் மறைவு எங்களை துயரில் ஆழ்த்தியுள்ளது. அவர் தன்னுடையதும், எங்களுடையதுமான கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நல்கிய அதியுன்னத சேவையால் எம் மத்தியில் ஓர் உயர்வான ஸ்தானத்தில் வைத்துக் கௌரவிக்கப் படுபவர். அதிபர் ஹன்டி பேரின்ப நாயகத்தின் தளபதியாக அவரோடு பணியாற்றியும் பின் அவரது வாரிசாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்தும் திரு. ஹன்டி அவர்களின் பொற்காலத்திற்கும் அதன் வெற்றிக்கும் அயராது பணியாற்றியவர். திரு. ஹன்டியிடமிருந்து அதிபர் பதவியை பொறுப்பேற்று, கல்லூரியை உச்ச நிலைக்கு இட்டுச்சென்று தன் வழிகாட்டியின் புகழிற்கு மெருகூட்டியவர் என்பது கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் அறிந்த உண்மை.

"நாங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் பணியாற்றவும், சேவை புரியவும் பிறந்தவர்கள்" என்ற தன் வாக்கியத்தை இலட்சியமாக வரித்துக் கொண்டவர். கொக்குவில் இந்துக் கல்லூரி என்றும் அவர் உள்ளத்தினின்றும் நீங்கியதில்லை. அவரது அற்புதமான கொக்குவில் இந்துக் கல்லூரி பற்றிய நினைவுகள் உடல் வலுவிற்கு உந்து சக்தியாகவும், அதுபற்றி உரையாடுவது அதற்கான ஒரு "டானிக்" காகவும் அவருக்கு இருந்தது. அவர் கல்லூரிக் காகவே வாழ்ந்து மறைந்தார். நாங்கள் அவரது நினைவுகளையும், சம்பவங் களையும் கல்லூரியின் வரலாற்றை தெளிவாகப்புரிந்து கொள்வதற்கு பயன் படுத்தினோம். மிக அண்மையில் திரு. V. கணேசலிங்கம் அவர்கள் "கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறை வரலாற்றை எழுதுவதற்கு அவரை மிக நன்கு பயன்படுத்தியுள்ளார்". மார்ச் 20, 2004 அன்று வெளியிடப்பட்ட "மகுடம் 2004"ற்கு ஒரு வரலாற்று பெறுமதிமிக்க வாழ்த்துச் செய்தியை அவரிடம் இருந்து பெற்றதில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்தது. அதுவே அவர் எமக்கு வழங்கிய இறுதி வாழ்த்துச்செய்தியுமாகும். இவர் கல்லூரி யில் அண்மையில் அமைக்கப்பட்ட மூன்று

அமரர் திரு. C.K. கந்தசாமி அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முதலாவது விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் என பெருமிதமாக நினைவு கூரப்படு கின்றார். விஞ்ஞான பாடங்களை முதல் முதலாக கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்த பெருமையும் இவருக்கே உரியது.

அவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பலர், இன்று உயர் நிலையில் இருக்கின்றார்கள். அவர் இவை பற்றி தன் நெருங்கிய மாணவர்களுடன் அடிக்கடி உரையாடுவார். அவரது மென்மையான வார்த்தைகள் எம் செவிக-ளில் ரீங்காரமிடுகின்றன. நாங்கள் அவரையிட்டு பெருமையடைகின்றோம். அவர் பற்றிய எம் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும். அவரது பிரிவுடன் ஓர் சகாப்தம் பூரணம் அடைகின்றது. ஏப்பிரல் 24, 2004 இடம்பெற்ற எம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் அவரை நினைவு கூர்ந்து அவருக்காக இறைவனிடம் பிரார்த்தித்தோம். அவர் பூரணமாக வையத்துள் வாழ்ந்து வானுறை தெய்வத்துள் இடம்பெற்றுள்ளார்.

அவரின் மறைவால் துயருறும் அன்னாரின் மனைவி, மக்களின் ஆழ்ந்த துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அவர் எல்லாம் வல்ல இறைவனின் பாதார விந்தத்தில் இடம் பெறட்டும்!

கொக்குவில் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

விளையாட்டுத் தகவல்கள்

6ஆம் பக்கத் தொடர்ச்சி

துடுப்பாட்ட தரவரிசையில் ராகுல் திராவிட் முதலாம் இடம்

உலக சாதனையாளர் பிரையன் லாரைவைக் காட்டிலும் 10 புள்ளிகள் கூடுதலாகச் சேர்த்து Samsuma ரெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்டத் தரவரிசையில் முதலிடத்துக்கு உயர்ந்துள்ளார் இந்தியாவின் ராகுல் திராவிட்.

இவரது சிறப்பான ஆட்டத்தால் பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை 2-1 என இந்தியா கைப்பற்றியது. அதனாலேயே 7ஆவது இடத்தில் இருந்த திராவிட் முதல் இடத்துக்கு உயர்ந்துள்ளார் என ESPN ஸ்டார் ஸ்போர்ட்ஸ் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திராவிட் 156 புள்ளிகளைச் சேர்த்துள்ளார்.

தென் ஆப்பிரிக்காவின் ஜாக்கஸ் காலிஸ் 143 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தையும், கிப்ஸ் 138 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தையும், மாத்யூ ஹேடன் 129 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

வீரேந்திர சேவாக் 128 புள்ளிகளைச் சேர்த்து 6ஆவது இடத்திலும், லகஸ்மன் 102 புள்ளிகளுடன் 8ஆவது இடத்திலும் உள்ளனர்.

சச்சின் டெண்டுல்கரும், தென் ஆப்பிரிக்க அணிக் காப்டன் கிரேம் ஸ்மித்தும் தலா 94 புள்ளிகளுடன் கூட்டாக 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளனர்.

3ஆவது இடத்தில் இந்தியா: குழுதரவரிசையில் 60 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது இந்தியா. 80 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா முதலிடத்திலும், தென் ஆப்பிரிக்கா 64புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன.

பவுலிங் வரிசை: பவுலிங் தரவரிசையில் சிறீலங்கா வீரர் முத்தையா முரளீதரன் 149 புள்ளிகளைச் சேர்த்து 'முதல்' நடைபோடுகிறார்.

இங்கிலாந்து வீரர் ஸ்டீபன் ஹார்மிஷன் அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வார்னே ஆகியோர் தலா 130 புள்ளிகளைச் சேர்த்து கூட்டாக இரண்டாம் இடத்தில் உள்ளனர்.

அதே போல தென் ஆப்பிரிக்க வீரர் மகாய நிதினி, இந்தியாவின் அனில் கும்ப்ளே தலா 124 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தில் கூட்டாக உள்ளனர்.

கோமியோபதி வைத்தியம்
HOMOEOPATHY TREATMENT

இலங்கையில் பலவருட அனுபவம் உள்ளவரும் தற்போது கனடாவில் **ஹோமியோபதி - அக்கியுபஞ்சரில்** சிறப்புப் பெற்றவரும் மிகக் குறுகிய காலத்தில் பல அற்புதமான சிகிச்சைகளைச் செய்து மக்களை வியக்கச் செய்தவருமான

Dr. S. **கிறிஸ்ரி** MD (MA)

அவர்களை அணுகுங்கள்

சர்மவியாதி [SKIN PROBLEM] சொராசிஸ் [PSORIASIS] நாட்பட்ட தலையிடி [MIGRAINE] தொய்வு [ASTHMA] அலர்ஜி [Allergy] மூக்கடைப்பு, தீராத சளி [PHLEGM] மூட்டு வலிகள் [RHEUMATISM ARTHRITIS GOUT], மனநோய் [MENTAL DEPRESSION] சக்கரை வியாதி [DIABETES] கொலஸ்ரோல் [CHOLESTEROL] ஆரம்பம் பயப்பட வேண்டாம்.

ஆண்கள் பெண்கள் பிரச்சனைகள் [Male - Female Problems] இத்துடன் பெண்களுக்கு அதிக பிரச்சனையாக உள்ள முகப்பரு [ACNE], சொடுகு [Dandruff] தலைமயிர் உதிர்தல் ஆகியவற்றுக்கு உடன் நிரந்தர தீர்வு காணப்படும்.

அத்துடன் உடல் பருமன் குறைக்கவும் (Weight Loss) "Stop smoking" ஆகியவற்றுக்கும் சிகிச்சை உண்டு.

SKIN SPECIAL TREATMENT FOR PSORIASIS INCLUDING BABY'S

பிரச்சனை எதுவானாலும் நிரந்தர தீர்வுகாண உடன் தொடர்பு கொள்ளவும்

416-291-6711

Scarborough

MORTGAGES


Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below



LOW - LOW RATES AVAILABLE.
TO GET BEST RATE IN TOWN
PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





For more information call:

Anil Joshi at

416.888.1072



உள்ளங்கை, கால்களின் வர்மம் புள்ளிகள்


Hand & Foot Reflexology

டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PH.D
வவுனியா, இலங்கை

சென்ற இதழ் தொடர்ச்சி...

Piles - மூலம்

மூலம் கல்லீரலில் இருந்து மல்வாசலுக்கு செல்லும் மூன்று 'போர்ரல் நாளங்கள்' (Portal Veins) என்னு பெரிய நாளங்களால் உருவான உறுப்பாகும். இவ்விடத்தில் அதிக இரத்தம் தேங்கி ஏற்படும் வீக்கமே மூலம் எனப்படும். இதில் அதிக இரத்தம் தேங்கி வீக்கம் ஏற்படும். சில சமயம் இந்த நாளங்கள் உடைந்து இரத்தப்பெருக்கு ஏற்படலாம். மலபந்தம் ஏற்பட்டு கழிவுகள் பெருங்குடலால் வெளியேறாது பல நோய்கள் தோன்றும். இதன் வர்மப்புள்ளி



கைகளின் முற்பாகத்தில் மணிக்கட்டில் குறுக்கே பெருவிரலுக்கு நேர் கீழே உள்ளது. கால்களில் குதிக்காலின் நுனியில் உள்ளது. இதை அழுத்துவதால் மூலத்தில் தோன்றும் பலவித நோய்களும் குணமாகும். இரத்த தேக்கமும் குறைந்து வீக்கம் தணிந்து மூலம் சுருங்கிவிடும்.

Uterus - கருப்பை

இந்த உறுப்பு பெண்களின் கற்பப்பையை பிரதிபலிக்கும். இதில் தோன்றும் பலவித நோய்களும் மாதவிடாய் சம்மந்தமான நோய்கள். அங்கு தோன்றும் கட்டிகள், சிராய்ப்புக்கள், வேக்காட்டுக்கள் போன்ற நோய்களும் தோன்றும். இதன் வர்மப்புள்ளி பெண்களின் கைகளின் மணிக்கட்டில் பெருவிரலுக்கு கீழ் உள்ள மொழிக்கு உள்பக்கத்தில் உள்ளது. இதை அழுத்துவதால் இங்கு தோன்றும் நோய்கள் குணமாகும்.

Ovaries - சூழ்பை

இந்த உறுப்பு பெண்களின் கருப்பையின் மேற்பாகத்தில் உள்ளது. இதன் வர்மப்புள்ளி கைகளின் மணிக்கட்டில் பெருவிரலுக்கு நேர் கீழும் கால்களின் பெருவிரலுக்கு கீழ் உள்ள மொழிக்கு கீழும் இருக்கிறது. இவ்விடத்தை அழுத்துவதால் சூழ்பை பலப்படும். அதன் செயற்பாடு மேம்படும். கற்பம் தரிப்பதில் தாமதத்திற்கும் இந்த உறுப்பு காரணியாகலாம். இதை அழுத்துவதால் இந்த உறுப்பு பலப்படும்.

Hip & Knee - நாரியும், முழங்காலும்

இந்த வர்மப்புள்ளி அந்தப்பாகத்து உள்ளங்கை, கால்களின் கீழ்ப்பாகத்தின் ஓரத்தில் உள்ளது. இவற்றை அழுத்தி அதேபக்கத்து நாரி, முதுகில் ஏற்படும் வீக்கத்தைக் குணப்படுத்தலாம். வலியும் படிப்படியாக குறையும்.

Urinary Bladder - சலப்பை

இது வயிற்றின் கீழ் பாகத்தில் உள்ள சலப்பை. வர்மப்புள்ளி இரு உள்ளங்கை, கால்களின் அடிப்பகுதியில் உள்ளது. இதை நன்கு அழுத்துவதால் சலப்பையில் ஏற்படும் சலக்கடுப்பு, சலஅடைப்பு, சலஒழுக்கு முதலியனவும், வேக்காடும் குணமாகும்.

Small Intestine - சிறுகுடல்

இது வயிற்றிலுள்ள சிறுகுடலின் வர்மப்புள்ளி. இது இரு உள்ளங்கை, கால்களிலும் அடிப்பாகத்தில் உள்ளது. இதை நன்கு அழுத்துவதால், சிறுகுடல் வேக்காடு, அஜீரணம், வயிற்றில் வாய்வுத்தேக்கம் ஆகியவை நீங்கும்.

Colon - பெருங்குடல்

இந்தப்புள்ளி உள்ளங்கை கால்களின் அடிப்பாகத்தில் வளைவாக உள்ளது. இது வயிற்றிலுள்ள பெருங்குடல் வர்மப்புள்ளி. இதை அழுத்துவதால் வயிற்றில் ஏற்படும் உப்பிசம், பொருமல், மலச்சிக்கல் போன்றவை குணமாகும்.

Appendix - அபென்டிக்ஸ் என்னும் குடல் வால்

இது வயிற்றின் வலதுபாகத்திலுள்ள பெருங்குடலில் உள்ள ஒரு சிறிய வால் போன்ற உறுப்பின் வர்மப்புள்ளி. இந்தப்புள்ளி வலது உள்ளங்கை, கால்களின் அடிப்பாகத்தில் சின்னிவிரலுக்கு நேர் கீழே உள்ளது. இந்த உறுப்பில் வேக்காடு ஏற்படின் இந்தப்புள்ளி உள்ள இடத்தில் வலி காணப்படும். இதை அழுத்துவதால் இப்பாகத்தில் கழிவுப்பொருள்கள் சேர்ந்து இவ்வுறுப்பில் வேக்காடு வராது தடுக்கலாம்.

Gall Bladder - பித்தப்பை

இது கல்லீரலுக்குள் கீழ்ப்பாகத்தில் உள்ள பித்தநீர்சேகரித்து வைத்திருக்கும் உறுப்பு. இதிலிருந்து பித்தநீர் அவ்வப்போது ஜீரணத்துக்கு கொடுக்கப்படும். இதன் வர்மப்புள்ளி வலது உள்ளங்கை, கால்களில் சின்னிவிரலுக்கு கீழ் உள்ளங்கை கால்களின் நடுப்பாகத்தில் இருக்கிறது. இவ்விடத்தை அழுத்துவதால் இந்த உறுப்பு நன்கு செயற்படும். வேக்காடு அழற்சி செங்கமாரி முதலிய நோய்கள் குணமாகும்.

mhc

MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC



Dr. J. Mohan
D.P.M.S., N.H.C.

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள்
டாக்டர் ஜே. மோகன்

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOU FOLLOWING

Cough	Flu
Depression	Anxiety
Asthma	Tonsillitis
Gout	Arthritis
P.M.S	Leucorrhea
Migraines	Hair Loss
Diabetes	Cystitis
Cancer	Prostatitis
Obesity	Hemorrhoids
Stumatitis	Colitis

Also other Acute & Chronic Problem
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

ACTION HONDA
"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA
வாகனங்களை ஈழத்தமிழ் மகன்
சோதீஸ்
இடம் பெறும்போது


- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



June 30 2004 **வரையும் புதிய பழைய வாகனங்கள் வாங்குபவர்களிற்கு பல்லாயிரம் பரிசில்கள் காத்திருக்கின்றன.**

416-704-1179


அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough



வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.
முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



No Spraying
- No Smelling
- No Moving



Call: Kanthan **Tel: 416-283-9538**

வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

FIREMAN LOFRANCO
PERSONEL INJURY LAWYERS

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின்
உங்கள் முடிவை எடுங்கள்



*IF YOU HAVE OPTIONAL INSURANCE YOU CAN CLAIM
UP TO $1,000.00 IRB'S PER WEEK
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A MOTOR VEHICLE ACCIDENT
• FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY • SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே அழையுங்கள்

5255 YONGE ST, SUITE 1300, TORONTO - MISSISSAUGA - KITCHENER
தீபன் - (416) 505-9804
24 Hours Direct Line


SHAN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL




பயிற்சி நிலையம்




5 Lessons for $299
10 Lessons for $499 (1 Road Test Free)
20 Lessons For $899 (Including 2 Road Test Free)



சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan
Tel: 416-525-7958
40 NUGGET AVE., #8, Scarborough East End



உயர்மான பலதையில் வீடு மதங்க




Sheppard E / Allen
Condo Apt
2 Bedrooms
2 Washrooms



Neilson/Sheppard
Detached Home, 3 + 2 Bedrooms
2 Washrooms, Live and Rent
Bad Credit, 0% Down



Finch/Tapscott
Detached Home
3 + 2 Bedrooms
2 Washrooms



Markham/Kingston
Detached Home
3 + 2 Bedrooms
2 Washrooms




Lawrence/Mossbank
Detached Home
4 + 1 Bedrooms
4 Washrooms




Pharmacy/Lawrence
Detached Bangalow
3 Bedrooms
2 Washrooms



Highglen/Middlefield
Detached Home
4 + 2 Bedrooms
5 Washrooms




Bur Oak/9th Line
Detached Home
4 Bedrooms
3 Washrooms



Don Mills / Overlea
Condo Apt
3 Bedrooms
2 Washrooms



Markham/Sheppard
2 Story House, 3 + 1 Bedrooms
3 Washrooms, Live and Rent
Bad Credit, 0% Down



Brimley/Finch
Condo Townhouse
4 Bedrooms
3 Washrooms



Morningstar/Airport
Semi-Detached
4+1 Bedrooms
3 Washrooms

HOMELIFE
HIGHER STANDARDS

HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

சசி செல்வரட்ணம்

Real Estate Agent



Direct **416.725.1125**
Office **416.321.6969**

digi Media Creations -416.467.4952

வெளிவந்துவிட்டது
உலக தமிழோசை -07





கமரா போன்
காத்திருக்கும் அபாயங்கள்

CAN $2.50 ISSN: 1703-4353

உலக


தமிழோசை

சர்வதேச காலாண்டு தமிழ் சஞ்சிகை மார்ச் 2003 7





இனம் விட்டு
இனம் தாவும்
நோய்கள்





சிறப்பு
விலை
$1.50



இதுவரை ஆணின்
நிலையிலிருந்தே
காதல் அணுகப் பட்டிருக்கிறது
-தங்கர்பச்சான்

பாடசாலை மாணவிகள் பலர் குறுக்கு வழியில் விரைவாக பணம் சம்பாதிப்பதற்காக விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். இதற்கு இந்த செல்போன் மிகவும் உதவியாக இருக்கின்றது.

கமரா போன்; காத்திருக்கும் அபாயங்கள்...

பைத்தியக்காரத் தனமான ஐடியாக்கள்

அல்கைடா கையில் அணு ஆயுதம்





அறுவை 17

'ஹலோ!'
'வணக்கம் ஐயா!'.
'வணக்கம். என்ன புதினம்!'
'நானெல்லே சலரோகக்காரன் ஆகிவிட்டன்?'
'அது ஒரு பெரிய வருத்தம் இல்லை. கவலைப்படாதேயும். எத்தனை நாளாய் இருக்கு?'
'போன நவம்பரிலை சோர்வாய் இருக்குது, அடிக்கடி சிறுநீர் போகுது என்று சொல்லிக் குடும்ப வைத்தியரிடம் போனேன். அவர் இரத்தப் பரிசோதனைக்கு அனுப்பிச் சலரோகம் என்று கண்டுபிடிச்சார். பிறகும் இரண்டுதரம் சோதனைக்கு அனுப்பிச் சலரோகந்தான் என்று முடிவுகட்டிவிட்டார்.'
'இப்ப எத்தனை வயதாகுது?'

கவிஞர் வி. கந்தவனம்

'நாப்பத்தேழு ஆகுது.'
'பொதுவாக 45 வயதுக்கு மேலே சலரோகம் வந்தாலும் வரலாம் என்று தான் வைத்தியர்மார் சொல்லுகினம். இது பரம்பரை வருத்தமாகவும் இருக்கலாம். உங்கள் குடும்பத்திலே வேறு யாருக்கேனும் சலரோகம் இருக்கே?
'இல்லை ஐயா'
'வேறு, கொழுப்புச் சத்து. இரத்த அழுத்தம் என்று ஏதாவது இருக்கா?'
'இல்லை'
"தண்ணி கிண்ணி பாவிக்கிறனீரா?'
'இடைக்கிடை பாவிச்சு வந்ததுதான். இப்ப விட்டாச்சு!'
'சிகரட் பிடிக்கிறனீரா'
'அது இல்லாமல் இருக்கேலாது ஐயா. இருந்தாலும் குறைச்சுக்கொண்டுவாறன்!'
'இதுகளும் காரணங்களாக இருக்கலாம். இப்ப என்ன, குளிசை போடுகிறீரா ஊசி ஏற்றுகிறீரா?'
'குளிசைதான். நாளாந்தம் ஒவ்வொண்டு போட்டுக்கொண்டுவாறன்.'
'இருந்தாலும் சாப்பாட்டிலும் கவனமாக இருக்கவேணும்.'
'ஓம், ஓம் நேற்று ஒரு சலரோக வகுப்புக்கு டாக்குத்தர் அனுப்பினவர். அதிலும் பல விடயங்களைச் சொல்லிச்சினம். பொருத்தமான உணவு வகைகளைத் திட்டமிட்டுச் சாப்பிட்டுவந்தால் கட்டுப்படுத்தலாமாம். நாங்கள் வீட்டிலே சாப்பாட்டிலை கொஞ்சமும் கவனம் இல்லை ஐயா. இந்த வகுப்புக்குப் போனாப் போல அது நல்லாய் எனக்கு விளங்குகிறது. வயிறு முட்டச் சாப்பிடுகிறோம். ஆனால் இவர்கள் சொல்லுவது மாதிரி சத்துணவு எந்த அளவுக்குச் சாப்பிடுகிறோம் என்பது சந்தேகம்தான்!'
'இனிமேல் வயிறு முட்டவுஞ் சாப்பிடக்கூடாது!'



'ஓம் ஓம். அதுவுஞ் சொன்னவை. ஒரு நாளைக்கு வயிறு முட்ட மூன்று முறை சாப்பிடுவதிலும் பார்க்கக் கொஞ்சம் கொஞ்சமாக வேண்டுமென்றால் நாலு அல்லது ஐந்து தரம் சாப்பிடுவது நல்லதாம். மற்றது ஒழுங்கான முறையில் உடற்பயிற்சி எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்றுஞ் சொன்னார்கள். அதுகூட நான் சரியாய்ச் செய்கிறதில்லை. உணவு, உடற்பயிற்சி இவை இரண்டிலும் இனிமேல் மிகக் கவனமாக இருக்கப்போறன். சலரோகத்தைக் கட்டுபடுத்தாது போனால் வேறு பல வருத்தங்களும் வருமாம். இருதய நோய், கண்பார்வைக்குறைவு போன்றவற்றுக்குச் சலரோகம் வழிவகுக்குமாம். சிறுநீரகம் தொடர்பான வருத்தங்களும் வருமாம். மூட்டு வருத்தங்கள், புண்ணுகள் எல்லாம் வருமாம். பயப்படுத்துகினம் ஐயா!'
'அப்படியல்ல. எச்சரிக்கையாக இருக்கவேணும் என்று சொல்லுகினம். அவர்கள் உமக்கு உதவி தானே செய்கினம். அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு நடந்தால் சலரோகம் ஒரு பிரச்சனையாகவே உமக்கு இருக்காது.'
'ஓம் ஐயா. என்னுடைய வாழ்க்கை முறையையே மாற்றி அமைக்கப் போகிறேன்.'
'வாழ்த்துக்கள்! வணக்கம்.'
'வணக்கம்.'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!




MANIKKANDAN
Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
மணிகண்டன்.


Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு






இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.



இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள
மணிகண்டன். Pl. Call: Siva 416-283-1260
790 Military Trail , Unit 1A
Scarborough ON M1E 4P7

DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

கவலைப்படாதீர்கள்! அனைத்து வித
பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage
பெற அழையுங்கள். ராஜ்

தொலைபேசி எண் : 416-835-6695

Call : 'RAJ' for all kinds of
Debt & Mortgage Solution
Lendingtree.ca




WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS
DRAPERIES AND
SHUTTERS
• Venetian Blinds
• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

இருபத்தெட்டு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

FREE ESTIMATE



Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON
ன். செல்வம்
8482 /416.419.9247 / 905.201.7733



நாமும் நமது இல்லமும்

NO DOWN PAYMENT
கவனம் தேவை

186

பணம் இல்லாமல் வீடுவாங்குவது நடக்கக் கூடிய செயல். ஆனால்..., இதில் வீடு வாங்குபவரிற்கு நன்மையுள்ளதா? இல்லை, இது என்னுடைய ஆலோசனை. எனவே முதலீடு இல்லாமல் வீடு வாங்குபவர்கள் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும் என்பது எனது எண்ணம்.முதலீடு இல்லாமல் (No Down



Payment) வீடு வாங்குபவரிற்கு, உள்ள நன்மைகள் என்ன, தீமைகள் என்ன, என்பதை கவனிப்போம்.

நன்மை எனக்கூறப்போனால்: ஒன்றே ஒன்றைக் கூறலாம். சொந்தமாக வீடு வாங்கலாம். வாடகைப் பணம் செலுத்து வதற்கு பதிலாக சொந்த வீட்டிற்குரிய செலவுகளை தாமே செலுத்தலாம். ஆனால் வாடகைக்கு செலுத்துவதை விடக் கூடத்தான் மாதா மாதம் செலுத்தவேண்டி ஏற்படும்.

தீமைகள் என்ன என்பதனைப் பார்த்தால்: காப்புறுதிப் பெறுமதி (Insurance Premium) சாதாரணமாக உள்ளதனை விட அதிகமாகக் காணப்படும். இதனால், இதற்குரிய மாகாணவரியும் (PST) அதிகமாகும்.



மற்றையது, பொதுவாக 5% அல்லது மேலதிக முதலீடு (Down Payment) செய்வதால் மோட்கேஜ் பெறப்படும். நிதிநிறுவனத்தில் மோட்கேஜ் வட்டி வீதத்திற்கு கழிவு பெறலாம். உதாரணமாக நிதிநிறுவனம் கொடுக்கும் வட்டி வீதம் 6.0% ஆக இருந்தால் 4.5% வரை பெறலாம். ஆனால் முதலீடு இல்லாமல் பூச்சிய முதலீட்டுடன் வீடு வாங்கும் போது எதுவித கழிவும் பெறமுடியாது. எனவே எங்களது மாதாந்த கட்டுப்பணத்தில் பெரியளவு வித்தியாசத்தைக் காணக்கூடியதாக இருக்கும். (கூடியதாகக் காணப்படும்) மற்றும் எமது Credit Rating உம் சிறந்ததாக இருக்கவேண்டும். பொது வாக கூறினால் Credit Scores 300 இலிருந்து 900 வரை காணப்படும். ஆனால் No money Down இல் வீடு வாங்குபவர்களின் Credit Scores பொதுவாக 680 இற்கு மேல்காணப்படல் வேண்டும். (நிதி நிறுவனங்களிற்கு ஏற்ப மாறுபடலாம்)

குறிப்பு: எவ்வாறு எமது Credit Scores பாதிக்கப்படுகிறது என்பது: எமது கொடுக்கல் வாங்கல் பற்றிய மிகக்குறைந்த கால அளவீட்டில் எமது சரித்திரம் காணப்படல் (Too Little Credit History), அதிகமாக எமது Credit Report ஐ எடுத்துப்பார்த்தல் (அடிக்கடி check பண்ணுதல்), ஒழுங்கில்லாத கொடுப்பனவு முறை, அதிகளவு கடனும் அத்துடன் குறிப்பிட்ட தொகையை விட மேலதிகமாக Credit Card இலிருந்து கடன் எடுத்தல் போன்றவற்றாலும் Credit Score குறையும்.

ராஜா மகேந்திரன்

எனவே No Down Payment இல் வீடு வாங்குபவர்கள் கவனமாக, சிந்தித்து, செயல்படுவதால் இந்த மேலதிக செலவுகள் கொடுப்பனவுகளை கட்டுப் படுத்தலாம், குறைக்கலாம், அல்லது இல்லாமல் செய்யலாம் என்பதையும் அறிந்திருக்கவும்.

(Money is Credit or credit is Money)

கனடாவின் Credit Bureau:
EQUIFAX CANADA
இதன் இணையதளம் www.equifax.ca

புதிய குடிவரவாளர்கள் வீடு வாங்குவது அதிகம்.

அண்மையில் CIBC இற்காக DECIMA RESEARCH செய்த கணிப்பீட்டின்படி இன்றைய காலகட்டத்தில் கனடாவிற்கு வந்தவர்கள் வருபவர்கள் முன்னைய காலங்களில் வந்தவர்களை விட மிகவேகமாக வீடு வாங்குகிறார்கள். 1980 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு கனடாவிற்கு வந்தவர்கள் 6 வருடத்திற்குள் தங்களது முதலாவது வீடு வாங்குகின்றார்கள் எனவும் ஆனால் 80 களிக்கு முன்பு வந்தவர்கள் வீடு வாங்க 15 வருடகாலம் எடுத்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த கணிப்பீட்டின்படி 35 வயதிற்கும் 49 வயதிற்கும் இடைப் பட்டவர்கள் நான்கு வருடங்களிற்குள் வீடுவாங்குவதாகவும் தெரியவந்துள்ளது.

Raja M. Mahendran, P. Eng.
Broker/Owner
Office - 416- 321-6969
Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca

Interest Rate

5 Yrs Mortgage	4.69%
3 Yrs Mortgage	4.14%
Prime Rate	3.75%
Bank Rate	2.00%

ONTARIO FLOORING CO.

Free Estimate

- All types of Hardwood Floors Installed
- Old Floors Refinished
- All Workmanship Guaranteed

Over 30 years experience

Raja - 416-540-8626 Varathan - 416-267-5270



SAYEE DAYCARE

MIDLAND & LAWRENCE / ELLESMERE சந்திப்புக்கு அருகாமையிலிருந்து பிள்ளைகளைப் பராமரிக்கப்படும். இரண்டு நேர உணவும் Nessarry RHYMES, NAP TIME, INDOOR, OUTDOOR, PLAY TIME உண்டு.



1 HOUR —>$1

காலை 7:00 மணியிலிருந்து மாலை 10:00 மணிவரை திங்கள் தொடக்கம் ஞாயிறுவரை பிள்ளைகளைப் பராமரிக்கப்படும்.

SAYENE - 416-750-4354

J DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs.S.J. செளந்தரநாயகம்

#7 Birchcrest Court (Finch / Warden) 416-502-3033

வீடு விற்பனைக்கு

ஸ்காபரோவில் Neilson & Sheppard சந்திக்கு மிக அருகாமையில் 3 படுக்கை அறைகள் கொண்ட முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட Town House - வீடு விற்பனைக்கு.

மல்வேர்ண் கடைத்தொகுதி, TTC தரிப்பிடங்கள், HWY 401, அரச கத்தோலிக்க தனியார் பாடசாலைகள், வைத்திய நிலையங்கள் மிக அருகாமையில் மேலதிக தொடர்புகளுக்கு : ரவி மோகன்



முற்பணம் இல்லாமலும் வாங்கும் வசதிகள் செய்து தரப்படும்

Century 21

Ravi Mohan
Sales Representative

Percy Fulton Ltd. 416-566-1455
Member Broker
2911 Kennedy Road, Toronto, ON M1V 1S8

நம்பிக்கை விதை!

சென்ற இதழ் தொடர்ச்சி...

ஆனாலும் இன்று, நம்மில் பலருக்கு நம்பிக்கையில் கூட நம்பிக்கை இல்லை. ஆதலால் அவர்களுக்கு ஏற்படுகின்ற வாழ்வியல் போராட்டங்களுக்கு முகங் கொடுக்க முடியாமல் போகின்றது. அந்தப்பலவீனம் அவர்களுக்கு நோய் வந்து மரிக்கமுதல் சாகடித்துவிடுகிறது. வாழ்வில் இரண்டு முக்கியமான விடயங்கள் எவை என சில உளவியல் அறிஞர்கள் ஆராய்ந்தார்கள். உற்சாகம் - நம்பிக்கை இந்த இரண்டு விடயங்கள் தான் வாழ்வின் ஜீவாதாரம் என்று அவர்கள் கண்டு சொன்னார்கள். இந்த விடயங்களை உள்மனதில் உள்வாங்கிச் செயற்பட்டால் நம்செயல்கண்டு துன்பம் துன்பப்படும், வேதனை வெட்கிச்சாகும்.




நம்மில் பலருக்கு இருக்கின்ற பெரிய தாழ்வு மனப்பாங்கு என்னவெனில் 'நாம் இந்தக்காரியத்தில் வெற்றி பெறுவோமா தோல்வி ஏற்பட்டால் அவமானமல்லவா' என்று எண்ணி தம்மைத் தாமே புழுவைப்போல சுருக்கிக்கொள்ளுதல். வாழ்க்கையில் தடைகள் வரலாம். அவற்றை படிக்கல்லாக கருதவேண்டும். தடை என்பது நாம் அதையே திரும்பத்திரும்ப நினைத்துக்கொண்டு கிடக்கும் வரைதான். 'அது தடையல்ல' என்ற எண்ணம் மடைதிறந்து எழுச்சி கொண்டால் அது நம்மைக்காக்கும் குடையாக மாறிவிடும். நாம் ஒரு போட்டியில் ஒருமுறை தோல்வியைக் கண்டால், இனி நம்மால் முடியாது என்று சொல்லி அடுத்தமுறை முயற்சிக்காமல் அந்த அளவிலேயே முற்றுப்புள்ளி வைத்து விடுகிறோம். வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் உண்டு. தோல்வியும் வெற்றியும் உண்டு. அந்தத் தோல்வியை 'தற்காலிக விபத்து' என்று எடுத்துக்கொண்டு எழுந்து சொல்ல வேண்டும். அப்போது நாம் வெற்றி பெறுவோம். அந்த வெற்றி தொடர்ச்சித் தன்மையானதாக ஏற்பட வாய்ப்பு உண்டு. இதையே துணிந்து வாழ்ந்தால் தொடர்ந்து வாழலாம்' என்று ஒரு கவிஞன் பாடினான்.

முதற்தோல்வி முற்றும் தோல்வி என்பது வாழ்க்கையை விட்டு வெளியே போனவர்களின் வேதாந்தம். உண்மையில் முதற்தோல்வி என்பது 'நல்ல அனுபவம்' ஒவ்வொருவரதும் வெற்றி சோர்ந்து கிடப்பதால் கிடைப்பதில்லை. எழுந்து சென்று தோல்வியை உதைத்துக்கொள்வதால் கிடைக்கிறது. "கீழே விழுவது கோழையல்ல. விழுந்தும் எழாமலிருப்பதே கோழை" என்ற மேற்கோள் அடிக்கடி அடிக்கோடிட்டுப் பார்க்க வேண்டியது.

நம்மால் முடியும் என்ற எண்ணம் தான் வெற்றியின் ஒரு விதை. "நீ எதை நினைக்கின்றாயோ நீ அதுவாகி விடுகிறாய். நீ உன்னை பலமுடையவன் என்று நினைத்தால் நீ பலமுடையவனாகின்றாய்" என்ற வாசகம் எப்பொழுதும் நுகரத்தக்கது. முடியும் என்று எண்ணிக்கொண்டால் எல்லாக் கதவுகளும் திறக்கின்றன. முடியும் என்ற



நம்பிக்கை வலிமை கொண்டது. இது ஒருவனுடைய ஆழ்மனதில் தங்கியிருந்து அபார வேலைகளை செய்துவிடுகின்றது. புத்தர், ஜேம்ஸ் அலன், மகாத்மா காந்தி, பாரதி போன்றவர்கள் தீய இருளைக் கண்டு தீக்குச்சி கிழித்துப்போட்டவர்கள். நாமும் அவர்கள் போல் அஞ்சாது நின்றால் உலகம் கிரீடம் தந்து 'கின்னஸில்' பதித்துக் கொள்ளும். முன்னர் சொன்ன பெரியவர்கள் வென்று நிற்க காரணம் சோதனைகளையும் வேதனைகளையும் கண்டவிடத்து மனதை திடப்படுத்தி நம்பிக்கையோடு உழைத்த உழைப்புத்தான். வறுமையோ, கவலையோ, கண்ணீரோ நிரந்தரமல்ல. நம்பிக்கை முளைத்துவிட்டால் அவை பஞ்சாய்ப்பறந்துவிடும். இயலாமையையும் சோம்பலையும் முயற்சி கொண்டு முறியடித்தால் வாழ்க்கை இனிக்கிறது. "இருள் இருள் என்று சும்மா இருப்பதிலும் பார்க்க ஒரு சிறிய மெழுகுவர்த்தியை தேட முயற்சியுங்கள்" என்ற முத்தான மேற்கோளை குறிக்கோளாகக் கொண்டு முயற்சி செய்பவர்கள் வெற்றி பெற்றுவிடுகிறார்கள். நாளடைவில் அந்த முயற்சி ஒரு சூரியனையே பரிசளித்து விடும்! எந்தக்காரியத்தில் சித்தியடைய வேண்டுமோ அந்தக் காரியத்தை விடாமுயற்சியோடும் தன்னம்பிக்கை யோடும் செய்து கொள்வோமானால் அது பலித்துவிடும். 'எறும்பு ஊர கற்குழியும்' என்றார்கள். இந்த வாசகத்தின்மூலம் கல் தேயவேண்டுமானால் யானைதான் (அதன்மேல்) நடக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் போய்விடும். விடாமுயற்சி வீண்போகாது. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று சொன்னார்கள் நம்முன்னோர்கள். திரைகடல் ஓடித் தேடத் தேட வெற்றித் திரவியம் குவியும்.



மருந்து ஒன்று '666' என்று பெயர்கொண்டது. காரணம் அதைக் கண்டறிந்தவர் 665 முறை முயன்றும் தயாரிக்கமுடியாமல் போய்விட்டது. ஆனால் அதைக்கண்டறிவதில் அவர் சளைக்கவில்லை. 666ஆவது முறைதான் அதைக்கண்டறிந்தனர். அதனால் அதற்கு 'சால்வர்சார் 666' என்று பெயரிட்டனர். இதனைப்போலவே எடிசன் மின்சார விளக்கை தயார் செய்து கொண்டிருக்கிறார். அதற்கு மின் கொடுத்தவுடன் ஒளிச்சக்தியை பிறப்பிக்கும் ஒரு கம்பி தேவைப்பட்டது. எடிசன் எத்தனையோ உலோகக் கம்பிகளை எடுத்து முயன்று முயன்று பார்த்தார். மனம் சளைக்கவில்லை. கடைசியில் 'டங்ஸ்டன்' என்ற உலோகம். அந்த ஒளிவிடும் வேலை செய்தது. எனவே விடாமுயற்சியும் நம்பிக்கையும் வீண்போகவில்லை. உண்மைதான்! நம்பிக்கை என்ற நார் எடுத்துவிட்டால் உதிர்ந்த பூக்களும் ஒட்டிவிடுகின்றன.

"சாதாரண திறமையும் அசாதாரணமான விடாமுயற்சியும் கொண்டு எதையும் சாதித்துவிடலாம்' என்பது நடைமுறை சொல்லும் உண்மை.

சிலமாணவர்களே பரீட்சைக்கு போதியளவு படிப்பதில்லை. 'கடவுள் உள்ளார் சித்திபெறலாம்' என்று சொல்லிவிட்டு பரீட்சை எழுதுவார்கள். பெறுபேறு சித்திபெறுவதில்லை என்று வெளிவரும். எனவே கடவுள் அருள்வார் என்று மாணவன் நம்புவது தன்னை அமைதிப்படுத்தும் செயல். முயற்சி செய்யாமல் நம்பிக்கையை தவறாக ஏற்படுத்தி கடவுளை நம்பி தேர்வு செய்வதால் பயன் ஏதும் இல்லை. கற்றுத்தேறாமல் புல்லாங்குழலை புகழ்ந்து கொண்டேயிருப்பதால் சங்கீதம் வந்துவிடாது. வள்ளுவர் சொன்னார் நீ முழுநம்பிக்கையோ விடாமுயற்சி செய்தால் உனது செயலுக்கு கடவுளே வந்து துணைசெய்வர்" என்று

'குடி செய்வல் என்னும்
ஒருவற்கு தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்'


எனவே நம்பிக்கையோடு விடாமுயற்சி தேவை. மீண்டும் வள்ளுவர்

'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'

என்றார். முயற்சியின் பெரியபலனை உயர்த்திச் சொல்லியிருப்பது குறியிட்டுக் காட்ட வேண்டியகுறள்.

நாம் கண்ணால் காணும் ஒரு நிகழ்ச்சி, கனிகள் பழுத்த மரத்தில் பறவைகள் வந்து உட்கார்ந்து கனிகளை கொத்திக் தின்னுகின்றன. பறவைகள் வந்து கொத்துகின்றது என்று மரம் காய்த்துப்பழுக்காமல் இருக்கின்றதா? பூத்துக்குலுங்காமல் புதைக்கின்றதா? இதே போலவே நமது வாழ்க்கை ஒரு கனிந்த மரம். அதில் கவலை என்ற பறவைகள் கொத்தும். அதற்காக பூக்காமலோ காய்காமலோ இருந்து விடக்கூடாது என்பதில் கவனம் இருக்கவேண்டும். புகழ்பெற்ற எழுத்தாளர் 'சார்ஸ் டிக்கன்ஸ்' உயர்குடியில் பிறந்தவர். அவர்கள் வீட்டின் மேல் வறுமை ஒரு கறுப்பு வலையை வீசியது. ஏழ்மையில் பிடியில் சிக்கியதன் பயனாக கவலை அவரை சூழ்ந்துகொண்டது. ஆனாலும் முயற்சி குன்றாமல் தனக்குத் தரப்பட்ட பணிகளை ஒழுங்காகச் செய்து வந்தார். கவலைக்கு முன்னுரிமை அளிக்கப்படாதப்படியால்தான் அவரால் வெற்றி பெற்ற எழுத்தாளராக உயரமுடிந்தது.

துன்பம் இல்லாத உலகம் உண்டா? இருள் இல்லாத வானமுண்டா? பள்ளம் இல்லாத மேடு உண்டா? துன்பம், கவலை, கண்ணீர், தோல்வி இவையெல்லாம் நம்வாழ்வின் பகுதிகள். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். 'என் குழந்தை செத்துவிட்டான். அவனைப் பிழைக்கவையுங்கள்' என்று ஓலமிட்டு அழுதரற்றிய ஒரு தாயிடம் புத்தர் சொன்னார். 'எந்த வீட்டில் சாக்காடு



இல்லையோ அந்த வீட்டிலிருந்து கொஞ்சம் எள் வாங்கி வா' என்று அந்தப் பெண் வீடுவீடாக ஏறி இறங்கினாள். ஒவ்வொரு வீட்டிலும் சாவு நடந்திருக் கிறது. இறுதியாக பிறப்பு-இறப்பு, இன்பம்-துன்பம், கண்ணீர்-புன்னகை இவை யெல்லாம் வாழ்வின் அங்கங்கள் என்று அப்பெண் அறிந்து கொண்டாள். எனவே இவற்றையெல்லாம் வெல்ல வள்ளுவர் சொன்னார் 'இடுக்கண் வருங்கால் நகுக" அதாவது துன்பம் வந்தபோது வருந்தாதே சிரித்துவிடு என்றார். முயற்சியையும் நம்பிக்கையையும் ஆயுதங்களாக்கி போராடினால் வெற்றிகொடிகட்ட வாய்ப் புண்டு.

எந்த சோதனையும், வேதனையும் வரலாம். மனம் தளர்ச்சியடையாது முயற்சிகொண்டு நம்பிக்கையை கைப் பிடித்து நடந்தால் வெற்றிபெற்று விடலாம். நம்பிக்கையை நெஞ்சில் விதைத்தால் வாழ்வு வசந்தம் பெறும்.

"நலிந்த பொழுதிலும்
நம்பிக்கை கொள்!
தட்டான் தட்டலில் உதிரும்
தங்கமும் நகையாகும் என்று
நம்புதல் போல."

என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளை நம் உயிர்ச்சுவரில் பொறித்துக் கொண்டால், சோதனைகளும் வேதனை களும் வந்தவிடத்து தளர்ச்சியடையாது முயற்சியோடு போராடி முழுவெற்றி பெற்றுவிடலாம். வேர்களில் விழுப்புண் ஏற்பட்டால் விழுதுகள் மரத்தை விழ விடாதுகாப்பாற்றும் அந்த 'விழுதுகள்' தரும் நம்பிக்கையும் விடாமுயற்சியும் முகில்கள் சூரியனை மூடலாம், தடுக்காது என்று எண்ணி தடைக்கல் உடைத்தால் எப்போதும் வெளிச்சம்! நம்பிக்கையும் முயற்சியும் கொண்டு உழைத்தால் எப்போதும் வெற்றி!!!



- ந. தனுசுஜன்
யாழ்ப்பாணம்

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

சினிமாச் சிதறல்கள்

காமராஜ்



பெரிய பெரிய தயாரிப்பாளர்கள், சிறந்த இயக்குனர்கள் எனத் தமிழ்பட உலகில் பலர் இருந்தும், அவர்கள் கூடச் செய்யத்துணியாத இந்த உயர்ந்த முயற்சியை ரிஸ்க் (RISK) எடுத்துச் செய்ததற்காக முதலில் இயக்குனர் ஏ. பாலகிருஷ்ணனுக்கு நமது பாராட்டுக் களும் நன்றிகளும். புதிய தலை முறையினருக்குத் தெரியாத ஒரு மாபெரும் தலைவரை இப்படத்தின் மூலம் அவர்களுக்குச் சரியாக அடையாளம் காட்டியிருக்கிறார்.

விருதுப்பட்டியில் பிறந்து, குறைந்த பள்ளிப்படிப்பே பெற்ற ஒரு சாதாரணன், தலைநகர் டெல்லி சென்று 2 பிரதமர் களை ஆட்சியில் அமர்த்தும் அளவுக்கு வளர்ந்ததும் அவர் ஆட்சியில் அமர்த்திய இந்திராகாந்தியாலேயே இறுதிக் காலத்தில் மனம் நோகடிக்கப்பட்டதுமான காமராஜரின் வாழ்க்கையை இப்படம் விவரிக்கிறது.

காமராஜரின் வாழ்க்கையின் பலகால கட்டங்கள் படத்தில் சொல்லப்பட்டாலும் அவர் முதலமைச்சராக இருந்தபோது செயல்பட்ட விதத்தைச் சொல்லும் காட்சிகள் சூப்பர். பொதுவாகப்படத்தில் டொக்குமெண்டரித்தனம் (Documentary) இருந்தாலும் இக்காட்சிகளில் சாதாரண ரசிகர்களும் படத்துடன் ஐக்கியப்பட்டுச் சிரித்து இரசிக்கிறார்கள். முட்டையை அசைவம் என்பது, அம்மாவுக்கு முதலில் கம்பளி பிறகு Fan என்பது போன்ற காட்சிகள் திரையரங்கம் முழுக்கச் சிரிப்பொலியையும் ஏற்படுத்தி, அவரது எளிமையையும் நயமாகச் சொல்கின்றது. தனது கட்சித்தலைவரின் மிரட்டலைப் பொருட்படுத்தாத கலெக்டர் பசுபதி பாண்டியனைத்தட்டிக் கொடுத்துப் பாராட்டுவது. தனது தாயின் வசதிக்காக வீட்டுக்குள்ளே தண்ணீர்குழாய் போட்ட நகராட்சி அதிகாரியை கண்டிப்பது போன்ற காட்சிகள் தற்கால அரசியல்வாதிகள் மேல் நமக்குக் கோபத்தை வரவழைக்கின்றன.

கண் சிகிச்சைக்காக லண்டன் செல்ல வேண்டிய விடயத்தில் சட்டம், மரபுகளை மீறலாமெனச் சொல்லும்போது நடை முறை நிர்வாகம் உணர்ந்த மேதையாக நிமிர்கிறார். படிப்பறிவு தருவதற்காக இலவசக்கல்வியைத் தந்தும் ஏழைக் குழந்தைகள் படிக்க வராததால் மதிய



உணவுத்திட்டம் கொண்டுவர தமிழ்நாடு முழுக்கப் பிச்சை எடுப்பேன் எனும்போது நமக்குச்சிலிர்க்கிறது.

திரைக்கதையை டொக்குமெண்டரி போலத் தோன்றாமல் இருக்கும் வகையில் செய்திருக்கலாம். 1967இல் காமராஜ் தலைமையிலான காங்கிரஸ் தோல்விக்கு முக்கியகாரணமான இந்திப் போராட்டத்தையும் எம். ஜி. ஆர் சுடப்பட்டதையும் கொஞ்சம் விவரித்திருக் கலாம். மேலும் இப்படத்தின் பிற்பாதி அன்றைய அரசியல் நிலவரம் தெரிந்தவர்களுக்கு மட்டும் புரியும் வகையில் இருப்பது ஒரு குறைதான். படத்தின் இறுதியில் வரும் "நாடு பார்த்ததுண்டோ" பாடல் அனைவர்

பரம்

கண்களிலும் ஈரத்தை வரவழைக்கிறது. படத்தில் ரிச்சர்ட்மதுரம் நிஜ காமராஜராகவே நம் கண்களுக்குத் தெரிகிறார். எஸ். எம். பாஸ்கரனின் குரல் மட்டுமல்லாமது தொனி, பேசும் ஸ்டைல் கூட காமராஜரை முற்றிலும் ஒத்திருக்கின்றன. இளவயதுக் காமரா-ஜராக சம்பத், பெரியாராக கோவை ராமசாமி, சி. சுப்பிரமணியமாக அரவமுதன், இந்திரா காந்தியாக எஸ். ஆனந்தி ஆகியோர் பொருத்தமாக உள்ளனர். ராஜாஜியாக நடித்தவர் பாத்திரத்துக்குப் பொருந்தவில்லை.

செம்பூர் ஜெயராஜ், டி. பிரான்சிஸ் கிரியா சேர்ந்து திரைக்கதை வசனம் எழுதியுள்ளனர். வசனம் கிரிஸ்பாக உள்ளது. ரங்கசாமி ஒளிப்பதிவு செய்ய வி.டி. விஜயன் படத்தொகுப்பைச் செய்திருக்கிறார். இளையராஜாவின் இசையில் பாடல்கள், பின்னணி இசை இரண்டும் அருமை.

பேரழகன்

கேரளாவில் பரபரப்பாக ஓடி சக்கை போடுபோட்ட படம் குஞ்சுகூனன். மலையாளத்தில் திலீப், நவ்யாநாயர், மான்யா இணைந்து நடித்த இந்தப்படம்



பல்வேறு பகுதிகளில் நூறு நாட்கள் ஓடி தயாரிப்பாளர்களின் கஜானாவை நிரப்பி யது. அந்தப்படத்தைத்தான் ஏவிஎம் நிறுவனம் 'பேரழகன்' என்ற பெயரில் தயாரிக்கிறது. சூர்யா, ஜோதிகா, விவேக் என்று ஏகப்பட்ட பிரபல நட்சத்திரங்கள் படத்தில் நடிக்கின்றனர்.

கேரளாவின் கொடுபுழா, கோலப்புறா போன்ற இடங்களில் படப்பிடிப்பு நடத்தியிருக்கிறார்கள். இதில் சூர்யா வுக்கு சின்னா, கார்த்திக் என்ற இரட்டை வேடங்கள். சின்னா பாத்திரத்திற்கு முதுகில் கூன்விழுந்து, கால்கள் வளைந்து, பல் நீண்ட வித்தியாசமான தோற்றம். கார்த்திக் பாத்திரத்திற்கு மாடர்ன் (Modern) பாத்திரம். அதேபோல் ஜோதிகாவுக்கு இரட்டை வேடம். கண்தெரியாத காரக்டர், காலேஜ் பெண் என்று நடிப்பில் புதுமை செய்திருக்கிறார் ஜோதிகா.

குழந்தைவேலு என்ற கல்யாணபுரோக்கர் காமெடி ரோலில் வருகிறார் விவேக். "அடேங்கப்பா" டீஸ்டால் உரிமை யாளராக இயக்குனர் மனோபாலா வருகிறார். ஆச்சி மனோரமா தன்பங்குக்குத் திறமையைக் காண்பித்து இருக்கிறார். கூனன் பாத்திரம் என்றாலும் முழுக்கக்காமெடியில் பின்னி எடுத்திருக் கிறார் சூர்யா. மே 6 ஆம் திகதி திரைக்கு வருகிறான் 'பேரழகன்'.

தொடர்ச்சி 24 ஆம் பக்கம்

உயிரே அழிந்தாலும்
உன் உருவம் அழியாது





ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough





தமிழர் நிர்வாகத்தில் ஒரு

EMBASSY



விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்:
416-332-0944



Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough
416-332-8451



ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



ஆமாம், கோபம் அன்புக்கு ஏங்குவதின் பிழையான வெளிப்பாடு. என்னுடன் அன்பாயிரு நேசமாயிரு என்பதைச் சரிவர வெளிப்படுத்த முடியாததால்தான் தன் பக்கம் கவனத்தை ஈர்க்க கோபம் வருகின்றது. அன்புக்காகத்தான் அனை வரும் (ஜீவராசிகள் அனைத்துங்கூட) ஏங்குகிறார்கள். ஆனால் அதை வெளி விடாது மறைமுகமாக வைத்திருப்பதால் தான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. எம் சுயமதிப்பு உயர்ந்து நன்கு வளர்ச்சி யடைந்தால் மற்றவர்களைத் துன்புறுத்து வதால் தான் எமது ஆளுமையை நிலைநாட்ட வேண்டிய தேவை எமக்கு ஏற்படாதல்லவா? நாம் நல்லவர்களாக வாழ்ந்தால் எமது சுயமதிப்பு தானே உயர நாம் நம்மையே நேசிப்பவர்களாக, மற்றவர்களையும் மதித்து நேசிப்பவர்களாக வாழலாம்.

லலிதா புரூடி

இன்று, ஏதாவது ஏச்சுப்பேச்சுக்களை குற்றங்குறைகளை, வன்செயல்களை நீங்கள் சந்திக்க நேர்ந்தால், ஆழ்ந்து சுவாசித்து, உங்களுக்குள் புகுந்து, அன்பை அள்ளி, அள்ளி, அன்பைப் பிழையான விதத்தில் யாசிக்கும் அந்த நபருக்குக் கொடுங்கள். அன்பு தேவையானபடியால் கத்திக் கோபிக்கும் அவருக்கு அன்பைக் கொடுத்து அவரின் கோபத்தைத் தணியுங்கள். இது புதிதாக இருந்தாலும் இதைச் செய்து பார்த்தால் மற்றவரின் கோபம் தணியும். நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும்.

இன்றுவரை அன்பில்லாது இரக்கம் காட்டாதவர்களுக்கு நீங்களும் இரங்காது இருந்திருப்பீர்கள். இன்றுமுதல் உன்னை எதிர்கொள்ளும் யாவற்றையும், அது எதுவாயிருந்தாலும் சரி, அன்பு, நேசம், இரக்கம் போன்ற நல்உணர்வுகளுடன் சந்திப்பதற்கு உறுதிகொள். யார் என்ன தான் சொன்னாலும், செய்தாலும் பரவாயில்லை. இன்றுமுதல் நான் எல்லோருக்கும் யாவற்றிற்கும், அன்பைக் கொடுத்துப் பரிமாறிக்கொள்ள விசு வாசத்துடன் உறுதிபூணுகிறேன்.

எதைச் செய்யப் பயப்படுகின்றேனோ, அதை அப்படிப் பயப்படும் நேரத்திலேயே, எனக்கு ஏற்படும் அந்தப் பயத்தை ஒரு சவாலாக ஏற்றுச் செயற்படுவது மட்டும் தான், என் பயத்தை முறியடிக்க எனக்கு உதவக்கூடிய ஒரேயொரு வழி என்பதை உணர்ந்ததும், நான் உண்மை அன்பு என்ன என்பதை அறிந்து கொள்வேன்.

வாழ்வில் அன்புக்கும் திருப்திக்கும் வெற்றிக்கும் இதோ ஒரு செய்முறைக் குறிப்பு:

1. மனம் நிறைந்த உறுதியான மனநோக்கு
2. கணம் திறந்த உள்ளம்
3. நிமிடம் உடன்பாடு
4. துளிகள் ஆயத்தமாயிருத்தல்
5. சிட்டிகை அன்பு

மேற்கூறியவற்றை, நம்பிக்கை விசுவாசம் என்பவற்றுடன் கலந்து திரட்டிக் கொள்ளவும். திரட்டிய மாவைப் பிசைந்து நம்பக்கையெனும் ரொட்டி போலத் தட்டியெடுக்கையில் ஏற்படும் மேடு பள்ளங்களைப் பிரார்த்தனையால் சமன் படுத்தவும். எதிர்பார்ப்புச் சிகரங்கள் நிறைந்த பாத்திரத்தில் மனவுறுதியுடன் கவனமாகக் கலவையை வைக்கவும். நீ, உன்னையே நேசிக்கும் பாசமிகு சிந்தனைகளுடன், உனது மனமென்னும் வெதுப்பகத்தை முன்கூட்டியே சூடாக்கிக் கொள். உன் இறைவனுக்கு உனது நன்றிப் பெருக்குப் போற்றுதல்கள் கலந்த மாவைப் பொங்கப் பண்ணட்டும். இறைவன் உன் நம்பிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றுவான் என்ற எதிர்பார்ப்புடன் பொறுமையாகக் காத்திரு. உன் நம்பிக்கை வீண் போகாது. இன்றுவரை எத்தனையோ சிதைந்த கனவுகளையும் தோல்விகளையும் நீ சந்தித்திருக்கலாம். உன்னை நீயே நேசிப்பதற்கு, உன் வாழ்வில் ஒரு புதிய திருப்புமுனைக்கு, ஏற்றமிகு எதிர்பார்ப்புகளுக்கு, ஒரு புதிய செய்முறைக் குறிப்பை இன்று நீ பரீட்சித்துப் பார். உனது அன்பையும் சக்தியையும் இது ஒன்றில் மட்டும் இன்று நீ செலுத்து.

அன்பு மயமான வாழ்க்கைக்கு அத்தியாவ சியமான பொருட்களைச் சேகரித்து அவற்றை உபயோகிப்பதில் நான் இன்று விசுவாசத்துடன் கவனம் செலுத்து கின்றேன்.

அன்பில் ஆரம்பித்து அன்பில் முடிவுறும் உலக வாழ்க்கையைத் தான் எனக்குத் தெரியும் என்பதை உணர்ந்து கொள்ளும் போது, நான் உண்மையான அன்பை அறிந்து கொள்வேன். எத்தனையோ புத்தகங்கள் அன்பைப்பற்றி எழுதப் பட்டிருக்கின்றன. அதைப்பற்றி எத்த னையோபேர் கனவு காண்கின்றனர். சிலர் அதைத் துரத்துகின்றனர். மற்றவர் அதைக் கண்டுகொள்கின்றனர். நாம் ஒவ்வொருவரும் எம்வாழ்வின் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அன்பின் இழப்பைச் அநுபவிப்பதாக நம்புகிறோம். அன்பை இழந்த பின், அது கிடைக்க வேண்டும் என்று யாசிக்கிறோம். அன்பு எப்படிப் பட்டது, என்ன மாதிரியாக அது இருக்க வேண்டும் என்ற, எமது அடிப்படை நம்பிக்கை, உண்மையானது என்பது எமக்கு நன்கு தெரியும். சில சமயங்களில் எமது நம்பிக்கை நிறைவேறாவிட்டால், எம் மனதை மாற்றிய, புதிய அணுகுமுறை ஒன்றைக் கையாண்டு, வேறு கோட்பாடுகளை உருவாக்கி, புதிய பாதைகளைச் நாம் சிருஷ்டித்துக் கொள்கிறோம். நாம் மாறினாலும் அன்பு மட்டும் மாற்றமடையாது அப்படியே இருக்கிறது. ஏனெனில் அது ஒருபோதும் மாற மாட்டாது. அளவிடமுடியாது, நிரந்தர மாக, அட்சய பாத்திரத்திலிருந்து பெருகு வது போலப் பெருகித் திகழ்வது அன்பு. உனது கண்களை ஒரு கணம் மூடிக் கொள். ஆழ்ந்து தூங்கும் பச்சிளங் குழந்தையின் நிர்மலமான களங்கமற்ற, தற்பாதுகாப்பற்ற முகத்தைக் கற்பனையில் நினை. அக்குழந்தையின் முகம் அன்பு. உனது கவலை, பயம் யாவற்றையும் பறந்தோடப் பண்ணிய, ஒரு முகம், ஓர் அரவணைப்பு, ஒரு தொழுகை, ஒரு மனம், உன் முகத்தில் புன்னகையையும் இதயத்தில் புளகாங்கிதத்தையும் நிறைத்த இவை போன்றவற்றைக் கற்பனை செய். அது தான் அன்பு. அன்பின் நிறம் என்ன? அதன் ஒலி என்ன? ஒரு நிமிடத்திற்கு, சகல தீங்குகளும் விலக, அன்பு உன்னைச் சூழ்ந்து அரவணைத்து, பாதுகாப்பதாகக் கற்பனை செய்து கொள். உனது தற்பாதுகாப்பு அரண்களைத் தகர்த்து, உனது இதயத்தை நீ திறந்ததும் அன்பு உனக்குக் கிட்டி விடும்.

நான் கலந்துகொண்ட தமிழர் திருமண எழுத்து வைபவமொன்றில் தம்பதிகள் கையொப்பமிட்டு முடிந்ததும், வெள்ளைக் கார DJ, இப்போ தன் புதிய மனைவியைக் கணவன் முத்தமிடலாம் என்றதும், தம்பதிகள் வெட்கத்துடன் முத்தமிட்டனர். இதைக் கண்கொட்டாது என்னருகே பார்த்துக் கொண்டிருந்த எட்டு வயதுச் சிறுமி, "தமிழர்களும் முத்தமிடுவார்கள் என்று எனக்குத் தெரியாது!" என்று ஆச்சரியத்துடன் சொன்னார். சுற்றியிருந்தவர்கள் கேட்டு ஆமாம் எமது சமுதாயத்தில் தான் இப்படி என்றனர். ஆமாம் தமிழர் தமது உணர்வுகளை வெளிக்காட்டுவது மிக மிகக் குறைவு என்பது உண்மைதான். அதற்காக மேற்கத்தையர் போல் தமிழர்களும் வெட்கமின்றி அத்துமீறி நடக்கவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. குடும்பங்களுக்குள் வெளிப்படையான அன்புப் பரிமாறல்கள் தம்பதிகள் ஒருவரோடொருவர், பெற்றோர் பிள்ளைகள் என்பன அத்தியவசியம். மனைவியர் சிரமப்பட்டு சமைத்த உணவில் இறைச்சி கூட அவிந்துவிட்டது / அவியவில்லை எனப் பிழை பிடிக்கும் கணவர் எம் சமுதாயத்தில் ஏராளம் இல்லையா? குடும்பங்களுக்குள் அன்புப் பரிமாறல்கள் தம்பதிகள் ஒருவரோ டொருவர், பிள்ளைகளுக்கும் பெற் றோருக்கும் எனக் கட்டாயம் பேச்சு செய்கைகளால் வெளிப்படுத்தி இக் கணத்தில் நீ எங்கிருந்தாலும், நீ இருக்கும் இடத்தில் இருக்கிறது, நிச்சயம் இருக்கிறது அன்பு. உடனடியாக உனக்கு அன்பு கிடைக்கும். ஆனால் அன்புக்கு நீ கிடைப்பாயா? அன்புக்கு நீ ஆயத்தமாய் இருக்கிறாயா? அன்பைப் பெற்றுக்கொள்ள உனது இதயம் திறந்திருக்கிறதா?

அன்பைத் தேடியோடி கண்டு பிடி க்க வேண் டு மென் று இன்றுவரை நீ நம்பி யிருந்திருக்க லா ம் . அ ன் பி ன் பி ர தி பி ம் பத் தையும் , அ ன் பி ன் சி ந் த னை யை யு ம் இ ன் று உ ன து ம ன தி ல் நிரப்பிக் கொள். நீயே அன்பாக மாறி, அன்பாக உலாவந்து, சகல வற்றிலும் அன்பைக் கண்டால், நீ உனது ஆன்மாவின் சத்தியத்தில் வாழ்கிறாய். இதைவிட மனநிறைவு அளிக்க வல்லது எது? மனதில் அன்புநிறைந்த எண்ணங்களைச் சிந்திப்பதிலும், யாவரிலும் அன்பை அடையாளங் காண்பதிலும் யாவருக்கும், எனது அன்பைப் பரிமாறுவதிலும் இன்று நான் சுறுசுறுப்பாய் ஈடுபட்டிருக்கின்றேன்.



மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள்
905-624-9617

Neelam Silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம் சில்க்



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்
"நீலம் சில்க்"

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)


T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

YARLCAN
STEAM CLEANING

* DUCT CLEANING
* CARPET CLEANING

உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-

மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709



வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க



ராஜா கேந்திரன்

Raja M. Mahendran, P.Eng

Broker / Owner

Direct:(416) **315-9397**

HOMELIFE HIGHER STANDARDS

Moringside/Ellesmere



Asking only $ 129,900

Stacked Town Home, 2+1Bedrooms
2 Washrooms, 1 Kitchen


WARDEN/FINCH



Asking $164,000

CONDO APARTMENT
3 Bedrooms 2 Washrooms
Close To Mall, Library, TTC,Etc

PHARMACY/LAWRENCE



Asking $349,900

DETACHED BUNGALOW, 3 +2 Bedrooms, 2 Washrooms, 2 Kitchens, Separate Entrance.
$$$ Lots of Upgrades

ALLEN/SHEPPARD



Asking $194,900

2 Bedrooms , 2 Washrooms, 1 Kitchen,
Corner Unit, One Block To Subway

MARKHAM/KINGSTON



Asking $269,900

Detached Back split
3+2 Bedrooms, 3 Washrooms
2 Kitchen, Separate entrance

MARKHAM / ECLINTON



Asking Only $142,900

Spacious, 2 Bedrooms Condo
2 Washrooms, Excellent Location,
Great View

IN MISSISSAUGA
BRAND NEW CONDOS FOR SALE BY
TRIDEL BUILDERS
1BED ROOM &1+DEN
2BEDROOMS &2+DEN
ALL WITH BALCONY
PRICE STARTING FROM $159,000
OCCUPANCY DATE: SUMMER 2006

TRIDEL TRIDEL

TRIDEL TRIDEL TRIDEL





NEILSON / McLEVIN



Asking $244,900

Detached Back split, 4+1 Bedrooms,
3 Washrooms, 2 Kitchen

MARKHAM/SHEPPARD



Asking $274,900

Two Story Link House, Excellent Condition, Hardwood Floor Thru-Out, 3+1 Bedrooms, 3 Washrooms, Finished Basement

IN MARKHAM



Asking $469,000

New Detached Home 4 + 2 Bedrooms,
5 Finished Basement, Separate Entrance

Toronto

Kennedy/Ellesmere

Excellent Home, Detached 2-story, 4+2 Bedrooms, 6 washrooms,3 Kitchens 2 Basement Apartments, Lots of Upgrades, Don't Miss This One.



Asking $529,000



Reduced
Asking only $255,000

MISSISSAUGA

Morningstar/Airport

Dream Home, Large backyard Semi-Detached, 2-Story, 4+1 Bedrooms, 3 Washrooms 2 Kitchens, Close to all Amenities

HOMELIFE/GTA Realty Inc., Real Estate Broker, 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON. M1S 3Y3.
TEL: (416) 321-6969 email: raja@mahendran.ca FAX: (416) 321-6963



மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

Answers to Tutorial 144 April 15, 04


Ans. 1. a) Lt ⟶ $x^2 - 4 / f(x)$
= lt x⟶ 5/Lt - 5
= 21/3 = 7

b) Lt $[f(x)]^2 - x^2 / f(x) + x$
= Lt $[f(x) - x][f(x) + x] / f(x) + x$
= x⟶ 4 = -1

Ans. 2. $y2 = 4x$, $2y\, dy/dx = 4$
$\therefore dy/dx$ at (1,2) = 1
Slope of tangent at (1,2) is 1.
Eqn of normal is $y - 2/x - 1 = -1$, $x + y = z$
centers of z circles lie on a str. line $x + y = 3$, Let the cordinates of the centre of each circle be (p,q) = (p,3p)
radius of each circle is $3\sqrt{2}$ since Radius of (1,2) is on the circumference of the circles. $(p - 1)^2 + (3 - p - 2)^2 = r^2$


$p^2 - 2p - 8 = 0$ $(p - 4 \times p + 2) = 0$
p = 4 or -2 q = -1 or q = 5
Centers of the circles are (2, -5) and (4, -1)
The equation of the circles are $(x + 2)^2 + (y - 5)^2 = 18$
and $(x - 4)^2 + (y + 1)^2 = 18$


Ans. 3 Speed of the sailor relative to the ocean floor
is = Sq root of$(.5^2 + 12^2 + 3^2)$
= 12.379 m/sec



Ans. 4. Let V_c rep. velocity of car, V_t rep. velocity of truck and V_R rep. Velocity of truck relative to car -> -> ->
$V_r = V_t - V_c$

$(V_r)^2 = 80^2 + 50^2$
V_R = 94.34 km/h
tan = 80/50 = 58°





Velocity of the truck relative to the car is approx. 94.3 km/h in a direction N32° E.

Tutorial - 145

1. A destroyer detects a submarine 8 nautical miles due east travelling North East at 20 knots. If the destroyer has a top speed of 30 knots, at what heading should it travel to intercept the submarine.

2. A D is a median of Δ A B C. E is on A D so that A E = 1/4 A D. If Δ A E C = 36 determine Δ A B C.

3. How many integers between 1and 1000 do not contain a digit 7.

4. Four switches each have three positions up, middle and down. How many different ways can the switches be arranged.


5. A box with a square base and no top must have a volume of 10,000 cms. If the smallest dimension in any direction is 5 cm, then determine the dimensions of the box that minimize the amount of material used .

BY. MR. S.F.XAVIER (Teacher) TEL: 416-431-6774



TUITION

DONMILLS & SHEPPARD பகுதியில்
முதலாம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை
மாலை 4:00 மணியிலிருந்து 7:00 மணிவரை
ENGLISH & MATH (ஆங்கிலம், கணிதம்) பாடங்கள்
சொல்லிக்கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: **416-502-2082**



HOME VISIT TUITION

GRADE 6 - GRADE 12
MATH: CALCULUS, ALGEBRA, GEOMETRY, FINITE, PHYSICS
PERSONAL TUTOR
Lesley Antony, C.Tech
தொடர்புகளுக்கு: **416-938-2860**
email: tjlesley@yahoo.com **web: www.tutor.saithweb.com**



TUTION

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு இன்றே

Math *Calculus*
Chemistry *Algebra/*
Physics *Geometry*
Accounting *Finite*

Teachers:
S. Sivakumar, M.Sc (Canada), M.C.S.E., A+
S. Sivakumaran, B.Sc (Hon), Dip-in Ed., MA (UK)
S. Vinotha, C.G.A
அத்திவாரமிடுங்கள்!!
From Grade 5 to University
College: Calculus, Linear Algebra & Geometry, Accounting
University: Calculus I & II, Fundamental Mathematics
தொடர்புகளிற்கு: **Kumar** -(416)**282-1421** / (416) **335-5595** /
(416) **835-5806** **Kennedy & Ellesmere, Morningside & Ellesmere**

TUITION



* Chemistry > Gr.13
> Gr. 11 * Physics
Gr. 13 * Finite
* Algebra & > Gr. 13
Calculus

* Maths New Curriculum for Grade 12 Geometry & Discrete Mathemetices, Universict preparation இவற்றுடன் **OAC** பாடங்கள். கனேடிய கல்வி அனுபவம் பெற்றவரால் நடத்தப்படுகிறது. **NEILSON / McLEVIN**
PL. CALL: Mr. & Mrs. Sharma,
(416) **724-8336**

TUITION




அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.
PL. CALL: 264-9471

ENGLISH & MATH TUITION

UNDERTAKES FOR GRADES 2 TO OAC (GR. 12)
BY
(EXPERIENCED LECTURES WITH WIDE EXPERIENCE)
IN
ENGLISH (Grammatical/Spoken/Written)
AND
Maths from Gr.2 to OAC & Gr. 12.
Groups of 4 and indivitual classes available for all grades.
Special groups of 4 and individual classes available in
(1) Geometry & Dis Mathematics (2) Advanced Functions & introductory Calculus
(Separate group classes available for girls only)
CONTACT: **416 - 431- 6774 (Markham & Ellesmere)**

மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா



மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா வருகின்ற June மாதம் Toronto மாநகரில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்கு குறுந்திரைப்படங்கள் உலகெங்கும் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

* பிரதிகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி மே மாதம் 16ஆம் நாள்.
* படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
* தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.
* பிரதிகள் அனுப்பவேண்டிய முகவரி: 4 Castlemore Avenue
Markham, Ontario, L6C 2B3 Canada
* தொடர்புகளுக்கு 416-431-5095, 905-887-7457, email: movies@pathcom.com
* சிறந்த நெறியாள்கை, சிறந்த திரைப்படம், சிறந்த எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த திரைக்கதை ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.

Art Film Society of Toronto

நூல் தொகுப்பு - அறிவித்தல்

அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஊடகவியலாளருக்கும் அன்பான வேண்டுகோள்!

தமிழீழ மண்ணில் 'இந்திய அமைதிப் படையின்' (1987-1990) காலப்பகுதி தொடர்பான இலக்கியப் பதிவுகள் கட்டுரைகள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடவிருக்கிறோம். இதுவரை வெளியிடப்பட்டவை மற்றும் வெளிவராது கையெழுத்துப்படிகளாக உள்ளவைகள் யாவையும் அனுப்பி, தமிழர் வரலாற்றின் முக்கிய காலகட்டத்தினைப் பதிவு செய்யும் செயற்பாட்டில் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இத்தொகுப்பு ஆவணி 2004 முடிவில் நிறைவு பெற இருப்பதால் அதற்கு இருகிழமைகள் முன்பாகக் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

முகவரி: OLKAAR, 73 Flora Dr., Toronto, ON, M1P 1A5, Canada
மின்னஞ்சல் : tamilvoice@hotmail.com

- ஒல்கார் அமைப்பினர்

SRI PARADISE Catering & Take -out

416-269-4509 / 416-509-2454

